உ

சிவமயம்.

மனுநீதிகாதல்.

இஃது

ஆத்தாங்கரையென்றுவழங்குகின்ற

ஆறைமாநகர் சாமிநாதப்பிள்ளையென்னும்

தெய்வச்சிலையாபிள்ளையவர்கள்

இயற்றியதை.

திருமணவூர்.

முனிசாமிமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

ம-ா-ா-ஸ்ரீ, பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியார்

அவர்களது

சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

விளம்பரம்.

இதனால் சகலமான பேர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் சென்னை பெரம்பூருக்கடுத்த குசப்பேட்டை படவேடம்மன் கோவில்வீதி 65 வது, கதவிலககமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்தில் நானாவித பெரியபுத்தகங்களும் நூதனமான சில்லரை புத்தகங்களும் இப்பொழுது நூதனமாய் அச்சிட்டிருக்கும் அங்கக்குறி சாஸ்திரம் இராவணேஸ்வரன் கும்மி மணிக்கயர் சாஸ்திரம் தொடுகுறி சாஸ்திரம் பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாதவாசமென்னும் விராடபர்வஅம்மானை.

இன்னும் பலவிதநூதனசில்லரை புத்தகங்களும் பெரிய புத்தகங்களும் தமிழ் பெரியஇந்திரசபாவும் இப்போது நூதனமா யச்சிட்டிருக்கும் (விராடபர்வஅம்மானை) பயிண்டுடன் விலை அணா-5.

சோதிடப்பெருநூலாகியகுருநூல் சப்தரிஷிவாக்கியம்முதல்பாகம்-1000-ம்பாட்டு அச்சிட்டு கூடியசீக்கிரத்தில்முடியும் தேவையானவர்கள்—

இலேசுகடிதம் கலிக்காபயிண்டு — ரூபா 1

சுகர்நாடியென்னும் சோதிடசாஸ்திரம் 1000ம்பாட்டு அச்சிட்டு கூடியசிக்கிரத்தில்முடியும்.

சென்னைபுரசைக்கடுத்த குசப்பேட்டைபடவட்டம்மன்கோவில் வீதி 66-வது நெம்பர்; வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சிரோன்மணிவிலாசஅச்சுக்கூடத்தலைவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு

பிடாரித்தாங்கல் - நாராயணசாமிமுதலியார் குமாரர்

☞ சிதம்பரமுதலியார்.

கடவுள்துணை.

மனுநீதிகாதல்.

காப்புகள்.

விநாயகர்துதி.

வெண்பா.

யானைமுகவானை யுமை யாளானார்பாலகனே
ஞானமுதலானகுரு நாதனே-மாநிலத்தில்
ஆதிமனு நூலினுரை யாதவனையானுமொரு
காதலெனவோதவருள் காண். ௧

இருவுமனு.

புத்திவருமெய்ஞ்ஞானப் போதமுறும்புண்ணியமும்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே-நித்தநித்தம்
சாதினையதாய்ப்புவியில் சாமிநாதன்சொல்மனு
நீதிநூல்பார்த்தால் நிதம். ௨

சரஸ்வதிதுதி.

பூமேவுலோகம் புகழுமனுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்துயான்பாட ௧
மூலகணேசன் முளரிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென்வாக்கிலிருந்தருள்வீர் ௨

அவையடக்கம்.

வேதமுறைசொன்னவிந்த மேதினியிலுள்ளமனு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினார்முன்னோர்கள் ௩
வள்ளுவனாரௌவைமுதல் வழுத்துமனுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிற்றகப்பைமுகந்தாற்போல் ௪
மாலைசதக மனுநீதிசாரமென்னும்
ஞாலமதிற்கவிஞர் நவின்றார்பலநூலால் ௫

காலமிடமறிதல்மிக் காணதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ர தாபம்பரிமளித்தல் ௧௬
தேவதாபத்தியுடன் சிட்டர்பரிபாலனமும்
மேலவராந்துஷ்டர்களை விரைந்தடக்குமாக்கினையும் ௧௭
மாசனங்கள்மீதிலபி மானமிதுபன்னான்கும்
ராசநீதத்தி னலமென்றுரைத்திடுமாம் ௧௮

வர்த்தகரொழுக்கம்.

தானறிந்தவாணிபமுந் தப்பாநிறைவசன
மானவராதாயத்துக் கதிகஞ்சிலவழியார் ௧௯
கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செய்வா ரிசைவார்க்கிசைவார்கள் ௨௰
பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கான வணிகர்குலமார்க்கமிதாம் ௨௧
மறையோர்க்குபங்களமு மன்னவர்க்குவல்லபமுங்
குறையாதவர்த்தகர்கள் கொள்வினையும்விற்பனையும் ௨௨

வேளாளரொழுக்கம்.

ஆகமவேதங்கள்தே வாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும் வேந்தர்கள்செங்கோன்முறையும் ௨௩
பாரிலேதர்மபரி பாலனங்கள்மேலுமுயர்
சூரவனுவுத் தொழிலாளர்சீவனமும் ௨௪
தாளாதகீர்த்தியுடன் றரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிபெருமையன்றோ ௨௫

தருமநீதி.

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றி மற்றுமுயர்கேடுளதோ ௨௬
தர்ம்மாதர்மம்ரெண்டுஞ் சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமு மனுபவித்துத்தீருமன்றோ ௨௭
எண்ணும்பலபொருளு மிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்கள்ரண்டும் போவதில்லையுன்னைவிட்டு ௨௮
பொன்னுடையாபரணம் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமுளதானமுண்டோ ௨௯
தன்னாற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தை முக்யஞ்செய்தலுத்தமமாம் ௩௰

பாவபுண்ணியமிரண்டும் பல்லாக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமும்பாவமுமாம் ௫௧

கோணாதனுவளவுங் குறையாதவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம் ௫௨

எண்ணறியவாழ்வு மெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல் புனல்நிறைந்தகாடாகும் ௫௩

ஏதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து ௫௪

வாக்குச்சரீர மதனாற்சகாயங்கள்
ஏர்க்கவேசெய்வோர்க் கிகபரம்வந்தெய்திடுமே ௫௫

எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்பவர்கள்
புத்திரருமத்திபமாய் போவார்நரகமதில் ௫௬

மன்னருடநீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்னபின்ன முண்டுபதின்மூன்றுரைப்பார் ௫௭

சேனைகுடியுஞ் சினேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும் ௫௮

மிச்சமறிவீகை மேலுந்தயிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்கும் ௫௯

தூங்காண்மைகல்வி துணிவுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசருக்கு ௬௦

யானைகுதிரைபடை யரணுடனேயாலயங்கள்
ஆனகல்லதர்ம மதினினைவுமந்தணர்க்கும் ௬௧

ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையும் ௬௨

தக்கமரியாதை தயவுங்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமந்தராசாவை ௬௩

ராசசிங்கமென்பரிவர் நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வறுமை வாராதென்றேயுரைத்தார் ௬௪

தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால் ௬௫

துன்னடக்கையென்றுமகா தோஷம்வந்துசூழுமென்றும்
நின்மலமாமென்று நிகழ்த்தினார்முந்நூலே ௬௬

ஆலரசுவேம்பிதுமூன் றுணதிலேயொவ்வொன்று
மேலும்விளாநெல்லி வில்வமதில்மும்மூன்றும் ௬௭

அன்பாகதெங்குமா மைந்தைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமீ தொன்பதையுமவைத்தவர்க்கு ௬௮

தரணியிமேலயெந்நாளு தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மனுநூலில் ௬௯

அன்னைதந்தைசுற்றங்க ளாதியிலேமையினவர்
முன்னுதவிசெய்தவர்கள் மிடிமையுற்றுவந்தவர்கள் ௭௰

தக்கபெரியோர்கள் சரணமென்றடைந்தவர்கள
மிக்கவெளியோர்கள் மேனாளிற்சேவகரை ௭௧

கைநழுவச்செய்யாமற் காப்பாற்றுமுத்தமற்கு
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம் ௭௨

தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தவுத்தமற்கு
என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே ௭௩

மாமறையோரேமுதலாய் மற்றுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனென்னெய் தேய்ப்பவர்கள்தங்களுக்கும் ௭௪

மறையோர்க்குத்தொண்டுசெய்வோர் மாதாவைத்தெய்வமென்போர்
கறவைதனைக்கண்டவுடன் கையாற்சொரிபவற்கும் ௭௫

எண்ணூற்கோடி எக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்று புகன்றார்மனுநூலில் ௭௬

துன்மார்க்கர்தங்குடியைச் சுத்தமாகக்கெடுத்து
சன்மார்க்கமுள்ளசில நற்குடியைக்காத்திடலாம் ௭௭

அறக்குடிபத்தானாலு மவர்கடனைக்கெடுத்து
சிறப்புற்றபட்டணத்தைச் சீர்திருத்திக்காத்திடலாம் ௭௮

வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்காக்க லாகுமதிற்பாவமில்லை ௭௯

என்றுமுன்னாள்மாமனு மேயரவானைப்பலியாய்க்
கொன்றிடப்பாண்டவர்க்குக் கூறியதிவ்வாறாகும ௮௰

தீபமொன்றுலட்சந் திரிகொளுத்தினுமந்தத்
தீபங்குறையாத செய்கைபோலென்னாளும் ௮௧

தலமீதிலோயாத தானதருமஞ்செய்பவர்க்கு
மலர்மாதாளுண்டாகும் வாழ்வதுவுங்குன்றாது ௮௨

நன்மையேதர்ம மதிஞலேவரும்வாழ்வு
துன்மைவருவதில்லை தூயமனே துன்றுது ௮௩

துன்மைதர்மத்தாற் றுலங்குமபெருவாழ்வு
நன்மைதரமாட்டாது நல்விர்த்தியாகாது ௮௪

தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்யநன்று
வர்மைவந்தால்தர்ம மதுசெய்யக்கூடாதே ௮௫

காய்பழுங்கள்பூவிலைகள் கதித்தமரங்களிலே
வாய்வுசென்றுல்நற்கனிகள் மட்டுமுதிராமல் ௮௬

தக்கபழுங்காய்பூ தளிர்முதலாயுதிரும்
பக்குவம்போற்கெற்பமுதற் பயந்தமனுக்களிலே ௮௭

சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சாவதில்லை யாக்குமென்றெண்ணவொண்ணு ௮௮

என்னவயதானுலு மியல்புவரும்வேளை
நன்னயஞ்சேர்தர்மஞ்செய் தாலதுவேயுத்தமமாம் ௮௯

பண்டுசெய்தபுண்ணியமும் பாவமென்றுஞ்சொல்லும்விதம்
ரண்டுமனுபவிப்பா ரெக்காலமானுலும் ௯௰

நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம் ௯௧

வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொற்க
வாசற்கதவு மாறுதடைத்திருக்கும் ௯௨

உப்பிலாக்கூழு முளமகிழ்ந்துதான்கொடுத்தால்
ஒப்பிலாப்பாலமிர்த மொக்குமென்றூர்முன்னேர்கள் ௯௩

பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலும
மிகவானநஞ்சுநஞ்சுக் கெட்டிக்காய்க்கொப்பிடலாம் ௯௪

ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனற்போல
நாட்டமுடனேவாழ்வு நாளுக்குநாள்குறையும் ௯௫

கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தர்மங் கொடுத்தாரேயாமாகில் ௯௬

வானுளேபோகும் வழியடைக்குங்கல்லென்று
கோனுதவாய்மை குறளிலேசொன்னுரே ௯௭

அறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்துசுற்ற தெய்வம்விதிர்தமக்காம் ௯௮

இல்லறத்தில்வாழ்ந்தா லிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னாரே ௯௯

பாவத்தாற்பொருடேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்க ளெள்ளளவுமவாராதே ௱

தாமத்தாற்றேடித் தாராதாமுங்கண்டறிந்து
தன்மையுடன்வந்தோர் தமக்குவிருந்தளித்து ௱௧

இன்னம்வரும்விருந்துக் கெதிர்பார்த்திருக்கின்ற
வன்னையவான்வீடந்த லட்சுமியின்வீடாகும். ௱௨

பூமியிலேவித்தேறும் போட்டதேயுண்டானால்
தாமேதானைஸ்வரியந் தன்னாலேகூடிவரும் ௱௩

ஏற்போர்களாரேனு மெவ்வேளைவந்தாலும்
கூர்ப்பாகத்தம்மாலே கூடுமட்டுமீந்தாக்கால் ௱௪

இருந்தாலிறந்தாலு மெந்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம் புகழுதிகவாழ்வுமுண்டாம் ௱௫

தர்மங்களாவதுதான் தர்மவான்செய்வதல்லால
கர்மிகளுக்கெய்தாதெக் காலமுந்தான்செய்யானும் ௱௬

எத்தர்மமானாலு மீகைக்கிணையில்லை
மற்றெல்லாபயினவென்று மனுநீதியிலுரைத்தார் ௱௭

மாரிச்சிறப்பு.

மண்ணிலுறுகலங்கள் மாதானமற்றுளதும
விண்ணின்றுபோனால் விழலாகும்வாரிமுதல் ௱௮

வாரிவளமு மானிலத்திற்பூடுஞ்
சீர்பெருந்தானதவந் தேவாலயச்சிறப்பும ௱௯

மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர்தாழ்வும்
மன்னுமுயர்வானமதில் மாரிவளமாமன்றோ ௱௰

இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகண வேள்விமுடித்தாலும்
இல்லாத்தின்வாழ்வுக் கிணையாவதொன்றுமில்லை ௧௧௧

மூர்த்தியென்றமூவருக்கும் முன்னாளிறந்தவற்கும்
பார்த்திபற்குந்துறந்தார் பலமுயர்ச்சியாளருக்கும் ௧௧௨

இயல்பிறவிவ்வாழ்வா ரிவர்க்குத்துணையெனவும்
நயமாகுமென்றுகுற ளானதிலேசொல்லினரே ௧௧௩.

மட்டில்லாவாழ்விருந்தென் மனைதனக்குமுக்கியமாம்
இட்டமுறுபெண்சாதி யென்பவளேமுன்னிலையாம ௧௧௪

சற்குணமுந்தெய்வபக்தி தர்மசிந்தைகற்புடைமை
இக்குணமுள்ளாலே யிருக்குமந்தவீட்டினிலே ௧௧௫

வற்றாதுசெல்வமவள் வாயால்மாரிபெய்யென்று
உத்தாரஞ்சொன்னா லுலகமெல்லாமாரிபெய்யும் ௧௧௬

தானுமனையாளுமொரு தர்மமதுசெய்யநன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுதர்மமல்ல ௧௧௭

செல்வநிலையாமை.

நினைத்தபொருள்நீங்கி நினையாப்பொருளெய்து
மனைத்துமதுதானே யப்படியுமவந்துவிடும் ௧௧௮

நிலையாகத்தோற்றுகின்ற நிலவதுவும்போயிருளாம்
கனஞ்சேரிருள்நிலவாய்க் காட்டுதற்கப்பாலும் ௧௧௯

இரவும்பகலாகும் பகலுமிரவாகும
பெரிதானமேடங்கே பேராறுயாகிவிடும் ௧௨௰

ஆறதுவுமேடாகு மணல்நிலத்திலோடப்புரும்
வாரிசுவறியதில் மணலுமிகச்சூடாகும் ௧௨௧

வேண்டுநிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியோரு மேலோருமாவார்கள் ௧௨௨

தகமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருந் தாழ்வதுவும்வாழ்வதுவும் ௧௨௩

தெய்வச்செயல்.

பேராசையாலே பிரயாசைப்பட்டாலும்
வாராதுவாராது வருவதுவுமபோகாது ௧௨௪

எங்கெங்கேபோனாலு மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப் பலரைமிகநொந்தாலும் ௧௨௫

அழுதுதொழுதாலும் அனேகநாள்தெய்வத்தைப்
பழுதாயுரைத்தாலும் பயனேதுமெய்தாதே ௧௨௬

ஆழக்கடலி லமுக்கிமுகந்தாலும்
நாழிவரும்நாழியிலே நானாழிநீர்வருமோ ௧௨௭

பூக்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றி யாசையினால்வாராதே ௧௨௮

ஆவிற்புறவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சிலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க ௧௨௯

பாயவந்தராஜாளிப் பட்சியதுமேலுலவத்
தூயபுறாவின்மேற் றொடுத்தகணைவிலகி ௧௫௰

ராசாளிப்பட்சியுட லானதிலேதைத்துவிழப்
பாசமுறுவேடன் பதத்தில்விஷந்தீண்ட ௧௫௧

வேடனும்ராஜாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
சோடாய்ப்புறாவிரண்டுந் துன்பமற்றுவாழ்ந்ததுவே ௧௫௨

இத்தகமையாய்முடியு மீசன்செயலாலதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முன்னாலோர் ௧௫௩

அண்டரமுதுண்ண வரனுமேநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுறைந்து கோதைதனைப்பிரிந்தான் ௧௫௪

வேதன்சிரமிழந்து மிப்பாற்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனு மங்கமெலாங்கண்ணானான் ௧௫௫

சக்கிரேசனானவரிச் சந்திரனும்பெண்டீரும்
மிக்கதொருநாடிழந்து விலைப்பட்டுத்துன்பமுற்றார் ௧௫௬

மன்னுநளராசன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுதன்றினனே ௧௫௭

ஐவரடவியுற்று ராகையாலாரேனும்
வெய்யோன்விதிதனையே வெல்லவெவரால்முடியும் ௧௫௮

பூபாரந்தீர்த்த புயல்வண்ணன்வேடன்கை
ஆபாணம்பட்டிறந்து வானதைக்குள்ளானானும் ௧௫௯

ஆனைபறவையுட னரவமிம்மூன்றும்
சேனைமனிதர்கையிற சிக்கிமெலிவதுவும் ௧௬௰

நல்லகதிர்மதிகள் ராகுகேதுவாற்றுயருறலும்
வல்லதர்மவானுக்கு வறுமைவந்துசூழ்வதும் ௧௬௧

பாக்கியமுள்ளானுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப் புத்திரருண்டாவதுவும் ௧௬௨

நல்லோர்க்குப்பொல்லாத வண்டப்பெண்டாவதுவும்
பொல்லார்க்குநல்லகுணப் பெண்மனைவியாவதுவும் ௧௬௩

ஓரொன்பதொன்பதினா லூழிவிதிப்பானும்
வீரர்க்குமேலவர்க்கு மின்பதுன்பஞ்சமனும் ௧௬௪

ஆகாச்செயலுக்கு மயலார்பொருள்தனக்கும்
வாகாகவாலசமிட லைவத்தால்வருமதில்லை ௧௬௫

வாழ்வதுவுந்தாழ்வதுவு மன்றுவரும்நின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ கசசு

ஏலவேவந்திதுபோ மின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னு மிணைவரண்டுமெனுபவிப்பார் கசஎ

காலித்திரளிலொரு கன்றதனைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசுவறிந்துசேருதல்போல் கசஅ

ஓடியொளித்தாலுமக் குற்றபழவினைதான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள் கசகூ

எக்காலஞ்சென்றாலு மிறவாதபேரில்லை
மிக்கவிதிவசத்தை வெல்பவர்களாருமில்லை கருய

சுகபோசனம்.

தாளாண்மையென்னுந் தகைமைதனைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேயதிக மில்லையென்றுசொல்லினரே கருக

வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள் தன்னருகில்சஞ்சரிப்போர் கருஉ

மருவாருஞ்சந்தனமாம் வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்க ளாவின்பாலுள்ளவர்கள் கருங

சகடையாக்கிரை கன்னைப்பயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்பருக்கு மேலானபஞ்சமில்லை கருச

நற்சகோதரர் துற்சகோதரர்.

தம்பியர்மேலன்புடையோன் தர்மருராமர்
தம்பிமேல்சத்ராதி தசக்ரீவன்வாலியுமாம் கருரு

நற்றுணையாந்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றதொருதர்ம னுடன்பிறந்தநால்வர்களாம் கருசு

சுக்ரீபனுனவனுன் சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில் தமையனுக்குச்சத்ராதி கருஎ

பண்பாயுடன்பிறப்பிற் பகைபுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல் முறையினுரைத்தனரே கருஅ

அரசரிற் புகழ்பெற்றோர்.

மனுவிட்சுவாகுவுடன் வாகான அம்பரீஷன்
கணைதபெறுமாந்தாதா கார்த்திகார்ச்சுனன்பரதன் கருகூ

விருத்தச்சிபியுடனே விந்துச்சிவிந்துவுடன்
மருத்துப்பகீரதனும் வாணன்முசுகுந்தனுடன் கசுய

சீர்புகழ்யயாதி தேவேந்திரனுடனே
பாரிற்றசரதனும் பாண்டவர்களைவர்களும் கசுக

சத்யவரிச்சந்த்ரனுடன் தாதைதிரிச்சங்கு
உற்றநளன்விதுரா னேகோபுரூரவனும் ௧௬௨

அங்காளிலேபிரக லாதனுடன்மாபெலியு
பன்னுஞ்சடாயுருகன் வாகாம்விபிஷணனும் ௧௬௩

ஆறைந்துபேரு மதிகபூசாபலராய்ப்
பாரிற்புகழ்திருத்திப் பரமபதமுற்றவராம் ௧௬௪

ஏற்கைபெருந்திரளு மெழில்விசுவாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்க வாசகருமாபெலியும் ௧௬௫

வின்னமில்லாவள்ளுவரும் வேடனெனுங்கண்ணப்பன்
தன்றொலெழுவர்களுந் தானவராய்ப்பேறுபெற்றார் ௧௬௬

நல்லறிவு.

தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்ட வடுவொன்றுமாறாதே ௧௬௭

ஏற்கையுடனற்புகழோ டெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறு ஜென்மமெடுக்காமைநன்றாம் ௧௬௮

மண்ணிற்பிறப்பதெல்லா மாறிலதுவேகாட்டுக்
தண்ணமுளவாய்ச்சொல்லாற் சாதியறிந்திடலாம் ௧௬௯

சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாக
பெரியோர்தமையடுத்தாற் பேதமொன்றும்வாராதே ௧௭௰

துய்யகிரமம்நித்திய சோபனத்தினால்விளங்கும்
வையகத்துராஜாக்கள் மனுநீதியாற்சொலிப்பார் ௧௭௧

நாரியர்கள்சற்குணத்தி னாலேவிளங்குவர்கள்
கூறும்விதரணனுங் கொடையால்விளங்குவனும் ௧௭௨

பாரிலெந்நாளும் பகல்விளங்குமாவிரவிற்
காரிருளையுயவிளக்குங் காந்தியுமாபதியாம் ௧௭௩

பதிவிளங்கும்பொன்னாலே பார்விளங்குமேகமதால்
சதுராய்ப்பகைவிளங்குந் தங்கள்புயவலியால் ௧௭௪

குடியேவிளங்குவது கொற்றவர்களால்நீதி
நெடியதலம்விளங்கு நெஞ்சிலுற்றநல்லறிவால் ௧௭௫

புகழாற்கொடைவிளங்கும் போசனத்தாலுயிர்விளங்கும்
புகழரியநன்னூலாற் புத்திமிகவேவிளங்கும் ௧௭௬

சொந்தமென்றுதுற்சனரைத் தோழமைகள்செய்யவொண்ணுச்
சந்தேகமுற்றதொரு தையலரைச்சேரவொண்ணு ௧௭௭

சார்பில்லார்க்கில்லையில்லை தயவிலார்க்கறமுமில்லை
ஊரில்லார்க்கரசுமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை கஎஅ

பாடில்லாதார்க்கிந்த வையகத்தில்வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றலிலாபமில்லை கஎகூ

துற்சனர்க்குநேசமில்லை சுகமில்லார்க்காசையில்லை
இச்சகத்தினன்மைகளைக் கெப்போதழிவுமில்லை கஅ௰

பணிநின்குறிப்பை வதனத்தாலறிந்திடலாம்
அணைவோர்குணநடத்தை யதனாலறிந்திடலாம் கஅக

சார்மூர்த்திற்குரன்வனு தன்னையறிந்திடலாம
தமர்சேரும்வல்பிணியைத் தாதாலறிந்திடலாம் கஅஉ

கல்விப்ரசங்கத்திற் காணலாங்கவிஞர்திறம்
சொல்வன்மையாற்சாதி தோற்றமறிந்திடலாம் கஅங

மாநிலத்திற்பூண்டுகளை மழையாலறிந்திடலாம்
தானுநல்லார்பொல்லாரைச் சந்ததியாற்கண்டிடலாம் கஅச

கண்ணிரண்டாம்யாவருக்குங் கற்றோர்க்குமூன்றுகண்ணாம்
எண்ணுந்தியாகிகளுக் கேழுகண்ணாகுமல்லோ கஅரு

மனங்குவிந்துஞான மகிமையறிந்தவர்க்கு
அனந்தங்கண்ணாகுமென் றருளினார்முன்னோர்கள் கஅசு

தர்மவான்றன்னிடத்திற் றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடங் கணத்ததர்மமில்லாது கஅஎ

நெருப்புக்குமுன்குளிரு மில்லாதுதான்மிகுந்த
கருத்தவிருள்பனியுங் கதிரோன்முனில்லாது கஅஅ

சத்தியத்தைநாளு மசத்தியமும்வெல்லாது
புத்திகெட்டகோபம் பொறுமைதனைவெல்லாது கஅகூ

புண்ணியத்தைப்பாவமொரு போதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கருட மந்திரமுன்னில்லாது ககூ௰

சந்தனங்கஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசெறியாபரண மிவற்றையெவரீய்ந்தாலும் ககூக

ஏற்போரொருகையா லேற்றாரேயாமாகில்
கூர்ப்பாய்க்கொடுப்பவற்குக் குறையாதாயிசுண்டாம் ககூஉ

செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
மகவானதெய்வமது மந்திராதீனமதாம ககூங

மந்திரமாவதுவே மாமறையோராதீனம்
சந்தஞ்சேர்மாமறையோர் சகலருக்குந்தெய்வமென்பார் ௧௯௪

பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழெனினும்
மேல்சுத்தமாய்க்கால மிதமறிந்துண்ணென்று ௧௯௫

நல்லோர்குற்றதுயரு நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொரு போதுநிற்கமாட்டாதே ௧௯௬

பாம்புகடுநெருப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மனுநூலோர் ௧௯௭

ஊமைக்குத்தோன்ற உபாயங்கள்சொல்லுவதும்
காமிக்குஞானக் கதையெடுத்துச்சாற்றுவதும் ௧௯௮

துட்டனுக்கெத்தனைபோ சொல்லிநன்மைசெய்வதுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைச்சொல்லுவதும் ௧௯௯

இன்பக்கவிகடனை யீயார்மேற்பாடுவதும்
அன்பில்லாச்சோரஸ்திரீ யாசையால்மெலிவதுவும் ௨௱

நலத்தைக்கொடுப்பதில்லை நன்றாகாதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ ௨௱௧

ஐந்தானபாவத்தி லானுமிரண்டுநலம்
ஐந்திலேமூன்றை யவ்வைசொன்னாளாகாதாம் ௨௱௨

தெய்வத்தாலாகா தெனினு முயற்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர் ௨௱௩

இத்தனைநாள்நம்வீட்டி லேற்றும்விளக்கென்றனுகி
முத்தமிட்டார்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடுமே ௨௱௪

உற்றகுலத்தெய்வநமக் கொன்றுசெய்யாதென்றுபொய்யாச்
சத்தியமும்பண்ணினாற் றான்விடவுமாட்டாது ௨௱௫

தூங்குவதுபோலுந் தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு ௨௱௬

கூட்டினுள்ளேயிருந்து குருவிபறப்பதுபோல்
தேட்டமுடம்பினிலே சீவனிருந்தேதுசெயல் ௨௱௭

கொல்லாமை.

கொலையென்றுநெஞ்சிற் குறியாதான்வாணாள்மேல்
மலைவாயுயிருண்ணு மறலிவரமாட்டானே ௨௱௮

நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவரெனின்
கொல்லாமையென்பதனைக் குறித்தறிந்தவுத்தமமாம் ௨௱௯

தானுதிபதிதூதன் தந்தைதாய்சற்குருவு
மானோர்மனையாட்டி மறையோர்பிராணிகளை ௨௱௰

சுத்தமுளவீரர் துலங்குகவிவாணர்
உற்றதபோதனாக ளுயர்குலத்தோர்பாலகர்கள் ௨௧௧

சாலவிகடப்பிர சங்கிபிணியாளர்
ஞாலமிசைவறுமை யாளர்பதிஜென்மரையும் ௨௧௨

எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சர்ப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே ௨௧௩

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போரை
ஆதிகுருவானவரை யவருடையசிஷரையும் ௨௧௪

சோதிடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
யோதரியபண்டிதரிவ் வோரெழுவர்தங்களையும் ௨௧௫

நிதானவஞ்சகங்கள் செய்தாரேயாமாகில்
நிதாய்க்கொடுநரகிற் சேர்வார்கள்திண்ணமிதே ௨௧௬

அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தவமைச்சர்களும் ௨௧௭

நன்றிமறந்தவரும ராசாக்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும் ௨௧௮

மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வேதாந்திமாதவத்தோர் மெய்நோகவைதவரும் ௨௧௯

தெய்வமிகழ்ந்தவருஞ் சின்னமுதலாகப்
பொய்சொல்வோரன்னியர்தம் பொருட்காசைப்பட்டவரும் ௨௨௰

பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
நேருண்டவீட்டுக் கிரண்டகங்கள்செய்தவரும் ௨௨௧

பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
நன்னயமில்லாத நரகிற்குடியிருப்பார் ௨௨௨

சோதிடங்கள்சொல்வோருந் தொடுவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாப்பண்டிதரும பிராயச்சித்தமவிதிப்போர் ௨௨௩

நீதியுரையாம விரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதினமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார் ௨௨௪

பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் பாதகனுமென்பவனும் ௨௨௫

கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
ருற்றசுமையேயென் னுலகமாதஞ்சுவளாம் ௨௨௬

அக்கினியிலேயுமிழ்ந்தோ ராறுபோமிவர்க்கு
மிக்கதொருகொடிய வியாதிவருமபின்னரகம ௨௨௭

தண்ணீரிலம்மணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருமலமும்நீர்விடுத்தோர் ௨௨௮

அசுத்தமுடனேதா னாலயத்திற்செல்வோர்கள்
கிசமாகச்சந்நிதியி னேராய்க்குடியிருப்போர் ௨௨௯

போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச்சூடினவர் ௨௩௰

நீராப்பிணியடைந்து செகத்திலிந்தமூவர்களும்
மாறுவனுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள் ௨௩௧

மேற்குலத்துக்கீழ்குலத்து மின்னாருடன்புணர்ந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவர்குலவிர்த்தியற்று ௨௩௨

கண்காணுக்கெய்தாத கடுஞ்சொல்லைச்சொன்னவர்கள்
மண்மேல்குலக்தோடு வன்னரகஞ்சேர்வார்கள் ௨௩௩

கெடுமதியாலொருத்தர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமுமேநாசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள் ௨௩௪

மன்னாவிருப மனுதனைபோதள்ளிவிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடிப்போர் ௨௩௫

ஊளியர்தனையடைந்தோர் கலகபுரியும்வஞ்சகர்கள்
பழியாளர்கோளர் பழிவினையரெண்மரையும் ௨௩௬

மண்டலத்தில்மூன் றுபிழை மட்டமொருத்தப்பாற்
தெண்டனைகள்செய்வதுவே தேசமன்னர்நீதியதாம் ௨௩௭

உரியவிவகாரம்வந்தா லுற்றார்பகைஞரென்றும்
பரிதானமெய்துசம் பந்தரிவரேழையென்றும் ௨௩௮

பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து
கூராய்ச்சமன்செய்த கோல்போலிருதலையும் ௨௩௯

நிறையாயுரைத்தவர்க்கு நீடூழிகாலம்வரை
குறையாதவாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம் ௨௪௰

துஷ்டநிக்கிரகம்.

சாதிமுறைதவறுஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்புவிசு வாசமில்லாப்பாதகர்கள் ௨௪௧

கோள்கள்மிகுத்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
காணும்பகையாளர் நாசனத்துரோகினை ௨௪௨

ஏழைதனையடித்தோரிகல்வினையுஞ்சண்டைகளைச்
சூழும்பிணிகளொடு துஷ்டமிருகந்திய ௨௪௩

கொண்டமைதீராத கோபம்பதினாறு
மன்றடக்குவதல்லா லதிகரித்தால்வெல்லரிதே ௨௪௪

தூற்சனரும்பொன்னுந் தூரகதமுநதேற்கருவி
மிச்சமுறுநரமயின் வெங்கலமாமுக்கருவி ௨௪௫

மானமில்லாமூளிக்கு மானாவர்களையும்
ஈனமிலாக்கரும்பு என்னுடனேயிரைக்கும் ௨௪௬

தெண்டித்தார்க்கல்லோ செயங்கொடுக்குமென்றிவற்றை
பண்டைவட நூலிற் பகர்ந்தாரே முன்னோர்கள் ௨௪௭

தந்தைதாயானாலுந் தன்குலமெல்லாம் விளக்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும் ௨௪௮

மந்திரியேயானாலு மருவுள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியென்றறிந்தால் ௨௪௯

அன்றேயகத்திடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனரே ௨௫௰

தோழமையில்வஞ்சகரை சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமாமுகத்தில் விட்டோடுஞ்சேவகரை ௨௫௧

மன்னர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வருவர்
தன்னைகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம் ௨௫௨

கல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணமலோபிதெய்வம் ௨௫௩

தாரித்திரனுக்கு தனங்கொடுப்பார்தெய்வமிக்கத்
தாரணியில்துஷ்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார் ௨௫௪

நீதியுடையோனுக்கு நேயரேதெய்வமதாம்
ஆதிபராபரமே யனைவோர்க்குந்தெய்வமதாம் ௨௫௫

அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னென்றுமுன்னென்று பேசித்திரியவொண்ணா ௨௫௬

வஞ்சகரைநம்பவொண்ணா வாக்கிரண்டுபேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையில்லாச் சண்டையினிற்போகவொண்ணா ௨௫௭

வேணவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச மாடம்பரம்வேணும் ௨௫௮

நீடுகதிகண்மிக நீங்கியதிந்தாலும்
ஓடங்கணையகற்றி யுதகத்திற்செல்லவொண்ணு ௨௫௯

ஞானமறிந்தாலு நாடோப்பனைகளது
வாணதுபோலேநடந்து மகிமைபெறவேவேணும் ௨௬௰

செம்பொற்குபேரனெனினுஞ் சீவனத்திலேமுயற்சி
பண்புடனேகாணும் பண்ணுதிருக்கவொண்ணு ௨௬௧

வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயிடினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறவும்வேணுமல்லோ ௨௬௨

உரித்தானபுத்திமதி யூகிமேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கநன்று ௨௬௩

பெற்றபிள்ளைதான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம ௨௬௪

மெலிவாகியேயதிஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே ௨௬௫

தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
வீராயவிழ்க்கத்தை விட்டுவிடலாகாதே ௨௬௬

தனியேபொருள்தேடித் தனித்துண்ணும்பாற்சோற்றி
லனையார்கிளையோடே யன்னுண்டகூழதிகம ௨௬௭

ஏதோர்மருங்கு மில்லாரிடத்தினிலே
பேதைகளாச்சேவித்து பெரும்பொருள்கள்வாங்குவதில் ௨௬௮

மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபோர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம் ௨௬௯

விணிற்பலவித்தை மெத்தவிருப்பதுவி
லாணிபாம்வித்தைதுக ளறக்கற்றலொன்றுநலம் ௨௭௰

சின்னமுயல்மான்கள் சிற்சிலதைவெல்லுவதி
லுன்னுபுலிக்குட்டி யொன்றைவென்றாற்கீர்த்தியுண்டாம் ௨௭௧

ஏதுந்தமிழருமை யெய்தான்றருங்கொடையில்
ஓதுந்தமிழருமை யொன்றறிந்தாற்போதுமல்லோ ௨௭௨

கடுகடுத்துமேவவணபொருள் கைவிற்கொடுப்பதிலும
அடைவாய்மகிழ்ந்தழைத்தே யன்றளிக்குங்கூழதிகம் ௨௭௩

வையகத்தில்வேள்விவெகு வாகவேசெய்வதிலும்
பொய்சொல்லாதேயிருந்தாற் போதுமனுசரியே ௨௭௪

அவிவேகியுடன்வெகுவா யானவுறவதிலும்
விவேகிபகையிருந்தால் மெத்தவு நன்றாகும் உஎரு

தன்னுயிர்க்குவந்தபயந் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிவிடவேண்டுதற்கும் உஎசு

மையல்கொண்டமாதருக்கும் வையத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தாற்பாவமொரு போதுமில்லையென்றனரே உஎஎ

பின்னால்வெகுபொருளைப் பேருயளிப்பதிலும்
முன்னாலதருணத்தி லீய்ந்தவரைக்காசுநன்றும் உஎஅ

நாளையென்றும்பின்னையென்றும் நாட்கெடுவுசொல்லுவதில்
வேளையிதுவல்லவோ வென்றுரைமிகவுநன்று உஎகூ

தெளிவானகல்விகற்றால் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம் உஅ௦

சித்தமதிற்பத்தியே தெய்வவசியமதாம்
உற்றப்பெருஞ்செல்வ முறவோர்களைவசியம் உஅக

வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
யாண்டுகட்டிக்காத்திருந்தா லரசர்வசியமுண்டாம் உஅஉ

சாந்தவொழுக்கஞ் சகலஜனவசியம்
வார்த்தைகமுநல்ல மனையாளுக்கேவசியம் உஅங

கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்க்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும் உஅச

தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குச்சொன்னாலு
மானமுளநல்லோர்க்கு வணங்கிநடந்தாலும் உஅரு

செய்தபிழைபொருத்துத் தேசமதில்வாழ்பவற்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுகற்பதமாம் உஅசு

தெய்வசபைராசசபை தேசிகன்புராணசபை
துய்யவயித்தியங்கள் சோதிடர்கள்தங்களிடம் உஅஎ

மருங்காயெவையுமங்கே வைத்துவணங்கனன்றாம்
வெறுங்கையாற்போனால் விழலாங்கருமமெல்லாம் உஅஅ

பாரிலொருதாயார் பலபிள்ளைபெற்றாலும்
சீருமழகுந் திறங்குணமும்வெவ்வேறாம் உஅகூ

பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
தயிரியமுள்ளவற்குத் தானோர்பயமுமில்லை உகூ௦

உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பாவமில்லை
நித்திரையில்லாதார்க்கு ரொருபயமுமில்லை ௨௯௧

தன்னவனாயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனாமென்றெண்ணி யன்றேயகற்றல்நலம் ௨௯௨

அன்னியனாயிருந் தன்புள்ளோனானக்கால்
தன்னவனாமென்றவனைத் தாபரித்துக்கொள்ளநலம் ௨௯௩

நல்லோர்க்குமுன்னாளோர் நன்மைசெய்தாலதற்குப்
பொல்லாவொருநூறு பிழையும்பொறுப்பார்கள் ௨௯௪

அற்பர்க்கெழுநூ றதிகநன்மைசெய்காலும்
சொற்பவொருபிழைதான் செய்தாற்பொறுக்காராம் ௨௯௫

செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம் ௨௯௬

கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவங்களுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும் ௨௯௭

சாதிவரம்பெண்ணா தனுசரிக்கவேண்டுவதே
நீதிமுறையென் றுமனு நீதிநூலோதிடுமாம் ௨௯௮

இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
நண்பில்லைசற்று மதற்கும்பழுதுசொல்வார் ௨௯௯

கற்றோரருமைதனைக் கற்றோரறிவதல்லாற்
சுத்தமலடிபிர சூதிதுயரறிவாளோ ௩௱

பஞ்சரித்துவேண பரிசுபெறுவதினு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணநன்றாகும் ௩௱௧

வீமயானசத்ராதி மெய்யென்றிருப்பதினும்
பாம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம் ௩௱௨

கண்ணென்றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணெணப்பதேனை யெழுத்தென்பதுவேகண் ௩௱௩

கைப்பொருளேபொய்ப்பொருளாங் காலவரைநில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்காப்பொருளாம் ௩௱௪

வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே ௩௱௫

யானைதனைதென் றடாதுசெய்யப்போகாது
தீனைதையிருந்து தின்றாலுங்கேடெய்தும் ௩௱௬

ராசருரியரென்று நடத்தைபொறுமைசெய்தால்
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே ௧௱௭

இல்லாரையுள்ளவர்க ளேசியிழுக்குரைத்தால்
நல்லதல்லநஷ்டநயம் ராட்டினம்போற்சுற்றிவரும் ௧௱௮

தேசமதிலேஷமுபர தேசிமறைவேதியரை
ராசர்காவாவிடா னன்றல்லபாவமுமாம் ௧௱௯

சாகாவரம்பெற் றவர்க்குப்பயமுமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை ௧௱௰

வித்தைகற்றால்தந்தைதாய் மேதினியெல்லாம்புகழும
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும் ௧௧௧

மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாவிட்டால் விரையில்லாப்பூவாகும் ௧௧௨

இருந்துமயிர்நகமுந் தேசமன்னர்பல்லான்றும்
இருந்தவிடப்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை ௧௧௩

மின்னூரில்தாசி வேதியர்நாய்கோழியுடன்
தன்மைசேர்பண்டிதர்கள் சாதியொத்துவாழார்கள் ௧௧௪

ஓங்குபொருட்சேத முயிர்ச்சேதம்வந்தணுகில்
சாங்கமுடன்சிரித்தாற் றயிரியம்வந்தெய்திடுமாம் ௧௧௫

தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருஷனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லாருமோர்துரும்பு ௧௧௬

வீரமிகுசூரனுக்கு மேவலர்சேனை துரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர்துரும்பு ௧௧௭

பெரியோருக்கற்பர்கைப் பிரயோசனந்துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்குக்கவிதுரும்பு ௧௧௮

நூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தறிந்தாலொருவன் பாவாணனென்பவனும் ௧௧௯

பாங்கானவார்த்தைசொல்வோன்பதினாயிரத்தொருவன்
நீங்காதகொடையாளி லட்சத்திலேயொருவன் ௧௨௰

சினமென்பதென்பதொரு சிக்காமனதையழுத்தால்
மனமென்பதென்பதுற்ற வாறேமுடித்திடலாம் ௧௨௧

அரிதானமாதவங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவிழலாக ௧௨௨

எத்தர்மமானாலு மெண்ணித்துணிதனன்று
யிக்கதுணிந்தபின்னர் மேலெண்ணினாலிழுக்காம் ௩௨௩

பட்சிக்கரசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குவேல்பலமாம் ௩௨௪

வாகனங்கள்தானுடையான் வழிநடைக்கஞ்சானும்
வாகுடனேபானுடையோன் வந்தவிருந்துக்கஞ்சான் ௩௨௫

வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்கார னென்றுங்குமஞ்சானே ௩௨௬

மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரனவ்வாறாய் வசையணுவுங்கேளானும் ௩௨௭

மேஷந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து
மாசுபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து ௩௨௮

சூடுகுட்டியும்பின்னே தொடர்ந்துவரும்வாறதுபோல்
கேடுகெட்டமாணபர் கீர்த்திகளுக்கஞ்சாரே ௩௨௯

மச்சுவிடால்நிழல் மானூர்தனக்கோடு
நிச்சயமாய்க்கணற்று நீராமிவைநான்கும் ௩௩௰

கட்டாகச்சீதள காலத்திலுஷ்ணமதாய்
திட்டமுடனுஷ்ணத்திற் சீதளமுமாகுமல்லோ ௩௩௧

சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்கால மறிந்துசெபஞ்செய்பவர்க்கு ௩௩௨

ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமனுநூலி னிசழ்த்தினார்முன்னோர்கள் ௩௩௩

பொன்னைத்தரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வன்னமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும் ௩௩௪

பெரியோரைச்சார்ந்தவர்க்குப் பெருமைமிகவுண்டாகும்
சிறிதானதூர்ச்சனரைச் சேர்ந்தவர்க்குக்கேடுவரும் ௩௩௫

விண்ணதனிலேயிருந்து விழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிரும்பில் வந்துவிழுமுனசுவறும் ௩௩௬

தாமரையில்விழ்ந்தாற் றழாதுயராது
சேமத்திரைகடலின் சிப்பிமேல்விழ்ந்தாக்கால் ௩௩௭

விலைமதிக்கவொண்ணாத வெண்டாளத்தையீனும்
தலமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து ௩௩௮

கோபிப்பதேதர்மமித்தக் கூறிக்குசெய்யாட்டால்
விடுப்பாய்கொடுப்பதெல்லாம் வீணாகுமென்றனரே ௧௩௯

காரிருளிற்புற்றடியிற் கண்டபழுதைதனைச்
சீறுமுயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல் ௧௪௦

உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனாலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்லார்கள் ௧௪௧

வீணாகப்போகா விடந்தனிலேபோகவொண்ணா
தோணாமற்போனாக்காற் றுன்பம்வரும்பின்னிழுக்காம் ௧௪௨

தேசிவந்தாற்பகலைத் தேடாதிமோகத்
தாசிவந்தாற்றனது தாரமதைத்தேடார்கள் ௧௪௩

ஆசையாலெப்பொருளும் அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோசமில்லைகேடுகெட்ட லுத்தரிலுலுத்தர்களாம் ௧௪௪

அன்னைபிதாமுக்கோ ணாசானரசருடன்
பின்னைப்பெரியோர்கள் பிராணசிநேகிதர்கள் ௧௪௫

ஆகவெழுவர்களு மழையா திருந்தாலும்
போகலாமேவலியப் பிழையொன்றுமீனமில்லை ௧௪௬

மலைகாணஞ்செல்லநன் றல்லாறுதான்றரித்த்
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டன்று ௧௪௭

ஓடெடுத்துவாங்கியே யுண்ணநன்றியாவர்களும்
நாடாவனத்தினிற்போய் நாடுவதுநன்றாகும் ௧௪௮

சுயாதலோபியிட மேறும்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்றாரேமுன்னாலோர் ௧௪௯

வெள்ளாட்டியானவளை விரகத்தினாலணைந்தால்
உள்ளகுலமும்போ பொழுக்கமெல்லாங்கெட்டுவிடும் ௧௫௦

வேசையரைச்சேர்ந்தாக்கால் வெட்கமில்லைபொன்சேதம்
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால் ௧௫௧

ஆயிசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தூயபிறர்தாரத்தைச் சோரத்திற்சேர்ந்தாக்கால் ௧௫௨

வன்னரகஞ்சேர்வரிவை யாகாதுகாணுமென்று
முன்னோர்வடநூலில் முறையாயுரைத்தனரே ௧௫௩

செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொரு போதும்வைக்கலாகாதே ௧௫௪

கூ

இன்னவகையின்றுறு செய்துமெய்தாதெனவே
தன்னிலதிக்குசெய்யா தாராஇஷ்டம்வரும் ௧௫௫

கன்றுண்டாறுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளைவிருமயிற் கொலைகள்வந்துசேரிடுமே ௧௫௬

சூதாடியிம்மையிலே துன்பவருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம் ௧௫௭

ஆகாயவீதிக்கு ஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்றோர் மாசபைக்குரத்தினமாம் ௧௫௮

சயனங்களுக்குரத்னம் சார்ந்தவழுநல்லபெண்கள்
நயமானவிடத்துக் ரத்னஞ்சற்புத்திரராம் ௧௫௯

ஏமனைவென்றாய மேற்பவரேயாகினும்
மேன்மைசெறிபெரியோர் வெம்பகையொன்றாகாது ௧௬௰

ஆர்க்குந்திருமா னுக்கிரகமுள்ளளவும்
பாருக்குள்ளோர்தப் பகையுமெருங்காது ௧௬௧

கூடாதகாலங் குறுகிவருங்காலம்
விடானையிலிருந்தும் வினைவிளையுந்தன்றுமே ௧௬௨

தாரித்திரர்கள்பசி தாங்குவதேமிக்ககொடை
எற்றபணக்காரர்க் கேவலுவேவட்டியுமாம் ௧௬௩

எளியோருடனெதிர்த்தே வென்றாலும்வலிதிலும்
விழிகாணுதோடென்று விரட்டுவதேநன்றாகும் ௧௬௪

அன்பில்லாதாரிடத்தி லதிகவுறவதிலும்
இன்புமவருடைய பெருத்தபகைநலமாம் ௧௬௫

வேண்டாப்பெண்டாரிதம லீனுப்பவைத்தேசவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிடலுத்தமமாம் ௧௬௬

சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவராம்
சாலவறுமையுற்றோர் சாவதற்கஞ்சாரும் ௧௬௭

பாரிலேயீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறென்னில்
பூர்வபட்சப் பிறைபோல்வளர்ந்திடுமாம் ௧௬௮

ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயினுஞ்
சாயுமமரபக்ஷ சந்திரன்போற்றேய்ந்திடுமாம் ௧௬௯

என்னவறுமையுறினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னாகுமென்றுசொல்லிடலாம் ௧௭௰

பாரித்தசெல்வர்கள்தான் பலர்க்குதவியில்லாவிட்டால்
தாித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம் ௧௭௧

கையானதும்மது கண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தறிக்கின்ற காரணமுண்டோவதுபோல் ௧௭௨

இளையோர்கமையடக்தோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேண்டுவதே பெரியோர்முறைமையதாம் ௧௭௩

அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிக்கான்கும்
வளமுடனேநம்முடைய மரணவரையில்லாது ௧௭௪

நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்புவைத்தா லாவின்பால்மட்டுமுண்ணும் ௧௭௫

தண்ணீரைத்தள்ளுந் தகைமைபோலேயுலகம்
விண்ணுவமாயுரைத்தா லிந்நூலைப்பாராமல் ௧௭௬

கண்ணியேயுண்ணிடுவா லென்பதனைக்கற்றக்கால்
மண்ணிற்சுகமும்வரும் மறுமையிலேசொற்கமுறும் ௧௭௭

இட்டமுறுமோகஸ்திரீயேதிகழ்ச்சிசெய்தாலும்
திட்டிபடித்தாலுஞ் சினம்வரவேமாட்டாது ௧௭௮

இன்பம்பொருளுமிக வெய்துவதாலுமதிற்
துன்பம்வருமென்றறிந்தாற் சொர்ப்பனத்திலேனுக்கவொண்ணு ௧௭௯

பயனில்லாவார்த்தைசொல்லிப் பலகாலுங்கோளுரைத்தால்
நயவாயவர்செய்யுந் தர்மம்பலியாது ௧௮௰

ஊரார்பகைதுன்ப மோயாமகாவறுமை
மாறுதெனவுமுன்னாள் வள்ளுவனார்சொன்னாரே ௧௮௧

வாழ்வுள்ளோராலு மகாஞானியாலும்
தாழ்வுள்ளோராலுந் தயிரியவானாலும் ௧௮௨

காடேர்ப்பனவெழி லாகாதொருநாளு
மூடத்தனமாக முன்பின்னுஞ்செய்பவரும் ௧௮௩

அருபியுமான அலகைமேலொக்குமென்றும்
பிறகவரைச்செய்த பிணத்தோடேசேர்க்கவென்றார் ௧௮௪

பொருளில்லாதார்க்கிக்கப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை ௧௮௫

ஊன்றின்பவர்க்கு வொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலுஞ் சாமபரிலேவிட்டசெய்யாம் ௧௮௬

வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
யார்க்குநல்லாரென்றுகள்ள வாசாரஞ்செய்வதுவும் ௧௮௭

காமக்குரோதமுற்றுக் கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்து வெண்ணீற்றைப்பூசிடுவார் ௧௮௮

தாடிவளர்த்துத் தலைமொட்டைசெய்திடுவார்
பாடிப்படித்துப் பாதுகையின்மேல்திரிவார் ௧௮௯

மகத்திவருமல்லவல்ல வாய்ப்பிழைப்புக்காத்திரியும்
செகச்சாலக்காரரிவர் சித்தியொன்றுமில்லையென்பார் ௧௯௰

ஆவென்றபாவமொன்று மற்றோர்பிறவியதும்
சீவன்முத்தனாகுமென்று செப்பினார்முன்றுலோர் ௧௯௧

பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமைவெகுளாமையிந்நான்கும் ௧௯௨

தவமிதுவாமென்றுந் தங்குமெய்ஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவரென்றுஞ் செப்பினார்வள்ளுவரும் ௧௯௩

மன்னவரேயானாலு மற்றெவர்களானாலு
மென்னவிதமாமோ ரிடர்வருமென்றேயறிந்தால் ௧௯௪

கைத்தாயமதனைக் காரமற்போனாக்கால்
மகத்தானவாழ்வுகெடும் மாநிலத்திற்றுன்பமுண்டாம் ௧௯௫

மாறினிலையும் வல்பிணியுந்தீக்கோளும்
வேறுபகைவர்களவர் மேலுமேலற்பகையும் ௧௯௬

வாராததற்கால வகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்து அவரைத்துணைக்கொள்வதாம் ௧௯௭

ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேயிருந்த மதனிலேசேர்க்கவென்றார் ௧௯௮

கலமீதிலமிக்கான் சாத்திரங்கள்கற்றாலு
மூலகவியற்கைதனை யொன்றும்விடலாகாது ௧௯௯

இல்லாதாரானாலு மிரந்துமூலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும் ௨௱

வலியாரெளியாரு மானவான்மூவரிட
மலிவானகோபங்கள் வைத்தாரேயாமாகில் ௨௱௧

நாடாளாம்லட்சுமியும் ராசர்பகைசேருங்
கேடாய்முடியுமென்று கீர்த்திஞானவையுந்தான் ௨௱௨

எப்போதுங்கீர்த்திசற்று மில்லான் றனைச்சுமக்கும்
வெப்பினூற்பூமி விளைவுகுன்றிப்போய்விடுமாம் ௪௱௩
குற்றமில்லாமற் கொடுத்துப்புகழ்தேடாரை
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும் ௪௱௪

காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்ச்சற்குருவை நிகழ்த்துங்கொடுங்காலம் ௪௱௫
பெரியோரைத்தூஷணித்துப் பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைநிந்தனையா யகம்பேசுமிக்காலம் ௪௱௬
மெய்யேபொய்யாங்கால மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப் பொருந்துமிக்காலம் ௪௱௭
வன்சமரிலோடினவர் வரிசைபெறுங்காலம்
அஞ்சியெயாண்டங்கி யரிவையர்மேலாங்காலம் ௪௱௮
இன்பமுறுநூல்படித்தா ரிகழ்ச்சிபுகல்காலம்
பண்பில்லாமையாண்டிப் பாட்டைமெய்க்குங்காலம் ௪௱௯
இனிதானசற்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்தற்காலம் ௪௱௰
பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம் ௪௱௰௧
ஆனகலிகாலத் தடைவிதுவேயானாலு
மானபரனைவலும் வையகத்திலுண்டெனலாம் ௪௱௰௨
இருப்பார்க்கொருகட்ணு மெய்சாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம் ௪௱௰௩
ஆசாரந்தர்மங்க ளங்கசுத்தமொன்றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம் ௪௱௰௪
தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்கொள்வாய்க்குங்காலம் ௪௱௰௫
சுகமாய்க்குடிப்பிறந்த சுதாகரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம் ௪௱௰௬
கொண்டபெண்ணைவிட்டுக் கொடிதானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலைபு முடர்மேலாங்காலம் ௪௱௰௭
சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்நியபுருஷர்சுற்று மபிசாரிக்காங்காலம் ௪௱௰௮

மேற்குலமுங்கீழ்குலமும் விபசாரத்திலிருந்தி
வாகுபெறுமவேசையர்கள் வயுமைக்குள்ளாங்காலம் ௨௱௧௯
பிள்ளைவயதிலிருக்காற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சீஷன்குருவைத்தேடான் ௨௱௨௰
பெண்டாணவள்ளியவள் பேச்சிலயிருக்தாக்கால்
கொண்டகணவனையுங் குறியாகவென்றுளாம ௨௱௨௧
பாரோர்களேழைதீர்ந்தாற் பண்டிதனைத்தேடார்கள்
இராணசெல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள் ௨௱௨௨
தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும் ௨௱௨௩
தெய்வகிகரான தேசிகனார்தேவி
வையவரையுந்தாயென் றருளினார்மூதுலோர் ௨௱௨௪
பெற்றபெண்போலவுமே பேணிமருமகளை
வைத்தாதரித்து வருமாமியேதாயாம் ௨௱௨௫
தந்தைதனக்கிளைய தாரமங்கைகேளி
இந்தவருஞ்சிற்றாங்கி பிள்ளைகட்குச்சத்ராதி ௨௱௨௬
பின்தாரப்பிள்ளையென்று பேதகமில்லாதமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம் ௨௱௨௭

பிதா.

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும
மன்னுாதமயனுடன் மாமன்வளாத்தவரும் ௨௱௨௮
வித்தைவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வருமபோதுகாத்தவரும ௨௱௨௯
ஓரொன்பதுபேரு முற்றபிதாவென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேடாகும் ௨௱௩௰
கல்விவருவித்துக் கடனென்றுமிலலாமற்
செல்வமுடன்வைத்த திறலானோர்தந்தையுமாம் ௨௱௩௧

மைந்தர்.

அற்பாசாம்றாறுபிள்ளை யானுமும்பெற்றுமென்ன
சற்புத்ரனென்றுற்ற நிலைமுறையெல்லாம்விளங்கும் ௨௱௩௨
தங்கைதாய்வாக்யந் தமயன்குருவாக்யம்
சிந்தைதனிற்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன் ௨௱௩௩
இத்தகைமையாறுடையோ னிணிபக்ஷசாதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும் ௨௱௩௪

எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வும் போசனமுகஞ்சாரும் ௨௬௫

தந்தைதாய்வாக்யமது தன்னைப்பரிபாலித்தோர்
நந்தாதசரதனும் ராசகுமாரனென்பார் ௨௬௬

பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரிக்மிக்க சுதன்பரசுராமனென்பார் ௨௬௭

ஆசான்றன்வாக்ய மனுவுந்தவறாதான்
வாசாலன்சத்யமுள்ள வாய்மையரிச்சந்திரனும் ௨௬௮

தமயனுரைதட்டாத சற்புத்திரரானோர்
தமையுமங்கேசிர்துக்கிற் றருமனுக்குநேரிலையோர் ௨௬௯

தந்தைபேர்தன்பேருந் தாரணியிலேவிளங்கத்
தந்தைதாய்சொல்மறுக்காத் தன்மையோன்புத்திரனும் ௨௭௰

தந்தைக்கிசைந்தமது தாரமேதன்றாய்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார் ௨௭௧

நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிரதினுற்ற சுதராலறிந்திடலாம் ௨௭௨

சோசியம்.

உற்பவித்தநாளும்பின் னென்பதுடனென்பதுவும்
வைப்பேதும்வைக்கவொண்ணா வழிபோகலாகாது ௨௭௩

வல்பிணியுந்தீராது மருந்துண்ணலாகாது
கல்யாணமெண்ணைமயிர் களைந்திடவுமாகாது ௨௭௪

இல்லம்புகுத லினிதுண்ணலும்விதைக்க
நல்லறங்கள்செய்திடவு நற்பணிகள்நற்றாக ௨௭௫

தானுந்தரிக்கவிது சார்ந்தநாளாகுமென்று
மேனாட்கணித விதியாலுரைத்தனரே ௨௭௬

திங்கள்முதனாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியமாவாசியிலும் ௨௭௭

சென்மநாள்மூன்றிலுஞ் சேயிழையைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தான்குறையுநோயணுதும் ௨௭௮

தலைக்கெண்ணெய்போசனமுஞ் சவரமுடனித்திரையும்
நலத்தைக்கொடுக்குமந்த நற்கிழக்குதெற்கதுவும் ௨௭௯

மற்றவிருதிசையு மாகாதுமத்திமமாம்
அத்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார் ௨௮௰

இலட்சுமியிருப்பிடம்.

மாயவன்றன் மார்பினிலு மன்னரிடத்தினிலுந்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர் ௩௫௧

தாமரையின்பூவினிலுஞ் சாகரத்திற்கங்கையிலுஞ்
சேமமுறுமியானை தேசிமுகத்தினிலும் ௩௫௨

ஊதுகின்றசங்கமுட னுத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்திற்றேரினிலே கெட்டபோதுன்னூர்பால் ௩௫௩

சுத்தமுள்ளவீரரிடம் சுத்தமாகியமனையிற்
பத்தியஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள் ௩௫௪

அழகுஞ்சுகிர்தமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும் ௩௫௫

கோகனகம்போல்சுத்த மானவிடந்தனிலும்
கோகனகமாது குடியிருப்பாளெந்நாளும் ௩௫௬

மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற் சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற் பல்விளக்காப்பேரிடத்தில ௩௫௭

ஆனைப்புகையில் சுடுகாடெரிபுகையில்
வானையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும் ௩௫௮

கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடனவிடத்திற்
கொள்ளிக்கரியுமியிற் கொட்டைநூற்பாரிடத்தில் ௩௫௯

நீசர்நிழலில் கிட்டையில்லாதிடத்திற்
பேசுங் குஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும் ௩௬௰

சுத்தமில்லாமனையிற் சுராபானரிடமிரவில்
வெற்றிபெறும்வேல் விரைவினிழல்தனிலும் ௩௬௧

என்னுஞ்சுகிர்தங்க ளில்லார்விதவைகளை
பொன்றியணைவோர்பா லுதயத்துயிலவோர்பால் ௩௬௨

நீணாளநந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத
மூதேவியானவள மேவிக்குடியிருப்பாள் ௩௬௩

பரங்காசுகரோடும் பகற்புணர்ச்சிசெய்பவருந்
தூங்காதிடக்கையாற் றூமபூலந்தின்பவரும் ௩௬௪

போசனங்கள்செய்கின்ற போதிற்சிரசினிலே
மாசுபூணத்துண்ட துணிமார்க்கரணவரும ௩௬௫

காலையினுமாலையினுங் கண்டுயிலவோர்கணுடனே
துப்பொருளவர்பால் லட்சுமியுகில்லாளே ௩௬௬

பகை.

பாசம்பெரியகத்தி பஞ்சுகளைக்கொளுவும்
சூரியனுஞ்சந்திரனுந் துஷ்டராகுவால்மறையும் ௪௬௭

சிற்றெறும்பால்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளும்வருமெங்கும் ௪௬௮

கந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடும்போரை
அந்தக்கொடியோரு மட்டமத்திலேசனியாம் ௪௬௯

சபையிற்பிரசங்கந் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமிட்டுப்பேசசில்மிச்ச மானதொருபெண்டிரும் ௪௭௰

தாமாய்விரோதியுடன் றனிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவருந செவ்வாய்க்கிணையெனலாம் ௪௭௧

தன்னைமிஞ்சுமடிமை சந்திராஷ்டம பக்குக்காய
தன்னைச்சபையேற்றுந் தமபிசென்மச்சூரியனும் ௪௭௨

சகோதராகுவஞ்சனை செய்தமயனுமெம்பவன்றான்
மகாபாவிமூன்று மிடத்துவியாழமதாம் ௪௭௩

பார்த்திபர்கள்மெத்தவென்று பழுதுசொல்லிக்கெடுப்போன்
ஏற்றமிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாம் ௪௭௪

சாலக்கடன்பட்ட தந்தையருமார்கருமனு
கூலமாயுப டுக் கொண்டுதிரிதாயாரும் ௪௭௫

வித்தையில்லாபிள்ளையுடன் வேசையாய்பெண்டாட்டி
சத்துருவர்நால்வரென்று சாற்றினார்முன்னாலோர் ௪௭௬

வேங்கைபதுங்குவதுமேஷம்பின்வாங்குவதும்
பாங்காய்ப்பகையுறவும் பாம்புசாய்ந்தாடுவதும் ௪௭௭

நல்லோர்பெரியோர்கணயந்துவணங்குவதும
மெல்லவிடச்சிரிபபும் விழிமகிழுமின்னொளியும் ௪௭௮

மிக்காணவில்வளையும் வேழமுறங்குதலும்
உக்கிரதளஞ்சமரி லொன்னலார்கொதுங்குவதும் ௪௭௯

இத்தகைய மீறைந்து மெளிதாயகினை ககவொண்ணு
மத்திபமுமாமுயிர்க்கு வாதைகளுமுண்டாகும் ௪௮௰

சொற்குற்றம்பாராட்டித் தொழிவழக்கைச்செய்பவர்போல்
பற்காட்டிச்சீவனங்கள் பண்ணித்திரிவதுதான் ௪௮௧

வலிதானவாடரவின் வஞ்சப்படத்தினுள்ளே
எலிவாழ்ந்தவாரென் றியம்பினார்முன்னாலோர் ௪௮௨

பண்பாய்க்கடுவுறவு பண்ணவுந்தானாகாது
பின்மலைவசையும்பிரிகதாற் பிணைகசாம்பகைசேரும ௪௮௩

அங்கபங்கமானாலு மருசியங்களானாலும்
தங்கள்குலத்தேகு தாழ்வுற்றிருக்காலும் ௪௮௪

நிந்தனைகள்சொல்லி நெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமு மிழிவில்லாதில்லையில்லை ௪௮௫

தன்மம்பழுபகையுந் தொடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்துமெ பெருமைசற்றுமில்லாது ௪௮௬

பகைவெறுப்பு

நேர்ந்தவினைவலியு நோவார்கடன்வலியும்
சேர்ந்துதுணைவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுவாம் ௪௮௭

கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தகாலமடைக் கொக்குபோல்வெற்றிகொள்வாம் ௪௮௮

நுட்பவெறும்பெலாங்கூடி நோக்காமலையேற
ஒப்பில்கருங்குழிந்த வுவமைபலவெல்லுதலாம் ௪௮௯

மெள்ளமெள்ளப்பாய்ந்தநீர் மிகக்கடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையறுத்தல் ௪௯௦

காலமதுவறிந்து காக்கைவெல்லுங்கூகைதனைக்
காலமதுதப்பிற் காக்கைதனைக்கூகைவெல்லும் ௪௯௧

சிலகாளையானைபொரு தேங்காயினூடக்கிப்
பலிதமுள்ளவேலைகண்டு பகைவனையேவென்றதுவாம் ௪௯௨

பண்பாகக்காலமது பார்த்துப்பகைவெல்லுதும்
பண்பிதுவாமென்று பகர்ந்தரேமுன்னோர்கள் ௪௯௩

உற்றபகைவரென்று முள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுப்பகை பேதமதைக்காட்டுவதாம் ௪௯௪

காலத்தின்சீலங் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்குவார்தப்பாது ௪௯௫

சேரிடம்

சந்தனவிருட்சமதைச சார்ந்தமரமல்வாசம்
அந்தமகாமேருவணைக் தவக்காகமன்னிறமாம் ௪௯௬

பாலில்கலந்தநீர் படிமணிக்குள்வடமும்
ஆலமரகதக்கற் சாய்கைபட்டதிம்பூன்று ௪௯௭

தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
நன்னயமாய்ச்சேர்ந்தோர்க்கு நற்குணமேயுண்டாகும் ௪௯௮

கல்லாரைக்காண்பதுவு கல்லாற்சொறகேட்பதுவு
நல்லார்குணமுரைத்தா னன்மையுண்டா நன்றாளம் ௪௯
ஆசாரமனபு மறிவடக்கமுள்ளோரைத்
தேசத்திற்கண்டு சேர்ந்தற்பெருமைவரும் ௫௰
கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாயலை
மதியமதிலேகுறுகும் வாறுசிறியோரிணக்கம் ௫௰௧
மதியந்திரும்பினபின் வர்த்திக்குஞ்சாயலைப்போல்
சதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலே நன்மைவரும் ௫௰௨
கற்றபெரியோருறவு கரும்பைநுனியிலிருந்
துற்றநல்வேர்வரைக்கு முண்டருசிபோலாகும் ௫௰௩
சிறியோருடனுறவு தின்கரும்படியிலிருந்
துரியநுனிவரைக்கு முண்டருசிபோலாகும் ௫௰௪

செல்லாவிடம்

கடலோடுங்கப்பலது கரையிலேயோடாது
புடவியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது ௫௰௫
தண்ணீரில்முதலையதைத் தந்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றி நாடுற்றாற்கேட்டையும் ௫௰௬
செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமென்றிச்
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாதே ௫௰௭

யோகம்

மன்னர்மெச்சிக்கொடுக்கும் வரிசையதிகாரம்
பன்னுஞ்சாமபிராச்சியமும் பட்டாபிஷேகமென்பார் ௫௰௮
நல்லகுணமாறுமூன்றல் நாடிவலியவந்து
புலமிஷலேயோகம் புத்தமிர்தசித்தமுமாம் ௫௰௯
மண்ணிற்புதைத்தபொருள் வாதமுறைக்காசையுற்று
எண்ணுவார்க்கெய்தாம் எண்ணார்கட்கெய்திவதும் ௬௰
குஞ்சம்பயிர்விதைத்து விளைவுகுன்றப்போவதுவுங்
கொஞ்சம்பயிரிடுவோர் கூடிவந்துவாழ்வதுவுங் ௬௰௧
கப்பல்வியாபாரங்களங்குனாந்துபோவதுவும்
சொற்பமாமவாணிபஞ்செய் தோர்களுக்குக்கூடுவதும் ௬௰௨
காணுமற்காணுமற் காவலர்கள்கேள்வியின்றித்
தேணுநலாய்வலியத் தொழில்கொடுத்துவாழ்வதும் ௬௰௩
மேனாளிற்றந்ததாம் விட்டகுறையாகுமென்று
நானுமுன்னாள்செய்திருந்த தானதர்மமாவதென்னும் ௬௰௪

தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கல்வி
நேசற்றிகபரத்தில் வருந்துணைதான்செய்தர்மம் ௪௭

நாதநகர்பாலவைத்தபொருள் மன்னவர்கடன்பழக்கம்
உற்றவிவேகிக்குபகாரஞ்செய்தலும் ௪௮

பருவத்திற்பெற்றபிள்ளை பக்குவத்திற்கற்றவித்தை
தருணத்திலீகைந்துந் தானதவுந்தப்பாதே ௪௯

என்னபகையானாலுமிடர்க்குதவிசெய்தல்சலம்
பின்னக்கவிசொல்லுமேன்மைசெயவரேபெரியோர் ௫௰

உதவாமை

தாய்பால்சொரிந்துமென்ன சுணல்மிகப்பூத்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகையிலாயுதமேன் ௫௧

எட்டிப்பழுத்துமென்ன பூண்டுதழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்திற் பண்ணிமருந்துமென்ன ௫௨

சற்குணமில்லாப்பெண் தங்கிறமாகியென்ன
பிக்கசைக்கோழை மிடிகல்விகற்றுமென்ன ௫௩

ஆட்டுக்கழுத்திலகரதுவுநீண்டென்ன
காட்டினிலவெரித்தென் காணவிநீர்கண்டுமென்ன ௫௪

வேசைக்குப்பொன்கொடுத்தேன் வீணருக்குநன்றிசெய்தேன்
மாசுடையவறபருக்கு வந்தென்னதிகாரம் ௫௫

காட்டுக்கரடிமயிர் கறுத்ததிரமாகி
நீட்டியிருந்தாலுமென்ன கெடுக்கக்குறையிலென்ன ௫௬

ஒக்கநியாயஞ்சொன்ன விகுதெண்ணிரண்டுமியாத
லுத்தர்கள்தம்வாழ்வுக்கு வொத்திருக்குந்தப்பாதே ௫௭

தேசியென்போர்க்கீபாதகிதடர்தமகுபொருள்
ஆகியிருந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன ௫௮

பேடியழகுகண்டு பெண்கள்மகிழுவதும்
நீடுஞ்சகசொலலை நிசமென்றிருப்பதுவும் ௫௯

கானல்கண்டேயோடுங்கலைமானுஞ்சாலவுயிர்ப்
பாயிலவுகாதிருந்த பச்சைக்கிளியதுவுந் ௬௰

தேனருந்தக்காறை மலர்சென்றசுரும்பினமுந்
தானுயாதநந்தன்கண்டு சப்பாணிமெய்ப்பதுவும் ௬௧

புல்லர்களின்காழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்று மனுனூலுரைத்திடுமாம் ௬௨

கல்லாமலே டினிலே கண்டெழுதினவைகதவிர்ந்த
உல்லாசமேவசையாக நூறவுசதமென்றிருக்கும் ௫௬௩

மறுதேசம்போனபின்னை வஞ்சருடனேனேசம்
வருமெனநேயன்னியர்பால் வைத்தபொருள் பலதும் ௫௬௪

தனைப்பெறுருதொரு தந்தைதாயானவரும்
பின்னுமுடன்பிறறாப் பின்னவர்கள்முன்னவர்கள் ௫௬௫

பேறுகத்தம்வயிற்றில் பெற்றுவளர்க்காதபிள்ளை
ஊராருடையசெல்வ முன்னன்பிலாதபெண்டீர் ௫௬௬

சத்தியமாயிராமுர் தருணுததருணமது
உறறசமத்துக் குதவாதுகண்டீரே ௫௬௭

ஆற்றிற்கரைத்தபுளி யனலிலேபோட்டவெண்ணெய்
காறறிற்பரந்தபஞ்சு காட்டிலெரித்தநிலா ௫௬௮

விரிந்தகமரினிலே வீழ்ந்ததொருவெண்பாலும்
பரிந்துகடற்சுழியிற் பாய்ந்தடைந்தகப்பலுந்தான் ௫௬௯

சுட்டமண்ணுனதிலே தெளித்திட்டபன்னீரும்
இட்டமுடன்விழலுக் கிறைத்ததொருநன்னீரும் ௫௭௰

வீணருக்குச்செய்தநன்றி வேசைக்களித்தபொருள்
காணுமிவைபத்தங் கைக்கூடாக்காரியமாம் ௫௭௧

சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யான்றருமம்
உப்புக ல்தனிலு மூவர்நிலத்திற்பெய்தமழை ௫௭௨

பாம்பினவாய்த்தேரை பரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவிவேந்தரிடஞ்சேர்ந்தபொருள் ௫௭௩

தானமாயாவருக்குந் தாரைவார்த்துக்கொடுத்துப்
போனபொருள்நமன்கை புகுந்ததொருமன்னுயிரும் ௫௭௪

ஆலைவாயின்கரும்பு மணைகடந்துபோனவெள்ளம்
வாணிலத்திற்கொள்ளையிற்றி வாதையிலும்போனமுதல் ௫௭௫

வையத்திலொன்பதுவும் வாராதுவந்தாலும்
ஐயமேயொருளுத்த வரைக்காசுமீயானும் ௫௭௬

கவரிமான்றன்மயிருங் கற்புடையாள்ஸ்தன்னியமும்
அவையாதவேங்கையின்றோ லதிசூரன்கைவேலும் ௫௭௭

ஆறாலும்வேளாபிபொருளைந்துப வராவுயிர்கள்
போனாலேயன்றியொரு போதினுமேகிட்டாதே ௫௭௮

கண்ணுக்கழகொட்டிக் கனிதாழையின்கனியும்
மன்னருக்கின்மல நிலையாமேலதுபயன் ௫௭௯

தாழைமடலோபெரிது சண்பமலர்மகிழாம்
தாழைமலர்வெய்யபோன் சாய்கைபட்டால்வாசம்போம் ௫அ௰

சின்னமகிழ்மலர் சருகாககாய்ந்தாலும்
விண்ணமில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது ௫அக

ஆழியில்நீரதிக மள்ளியுண்ணலாகாது
ஆழியருகூற்றுவரு மக்கீருநன்னீராம் ௫அஉ

இங்கிவற்றையொப்பாக யீகைசற்றுமில்லாதார்
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன ௫அங

தேசமதுவில்லாவிடினுஞ் சிறிடவருவானாலும்
பாசமுறுசற்குணமும் பலர்க்குதவிமெய்பெரிதாம் ௫அச

வேசையர்கள்நட்பும் விளக்கினதுவொளிவும்
மோசமில்லையிவவிரண்டு மொன்றுகுமென்றனரே ௫அரு
கைப்பொருளற்றால்வேசி கனிகளவுநட்பு மில்லை
மெய்ப்பாகவெண்ணெயற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை ௫அசு

நற்பிறப்புக்குமர்

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார்
பூவையலனேககார் புராணநெறியுணர்வார் ௫அஎ
மாதவங்கள்செய்வார் வன்கொலைகண்டஞ்சுவார்
கூடாராயரது துன்பத்துக்குள்ளாகார் ௫அஅ
உய்யவேயில்லா ருடையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினார்முன்னோர்கள் ௫அகூ
மாதாபிதாகுரு வானவனாந்தெய்வத்தை
மீதாய்பணியும் விசுவாசமுள்ளவர்கள் ௫கூ௰
தன்தாரமனறிமற தாரந்தனைநோக்கார்
புந்திமகிழ்ந்ததிதி பூசைபுரிவோரும் ௫கூக
சத்தியமொழிபூர்வ கர்மபரியாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலையதுவைத்தவரும் ௫கூஉ

பார்க்குட்சகாயமதாய்ப் பாட்டைதனைசீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்ப்பந்தல் மண்டபங்கூவம்வாரு ௫கூங

செய்யுமகாபுண்யத் தேகாமுத்தயர்க்கு
எய்யாமலைபோலே யாதுதுன்பம்வந்தாலும் ௫கூச

வெய்யில்தனைக்கண்டு விலகும்பனியெனப்போம்
ஐகலாசநற்பதமெக காலுமிவர்க்குண்டாகும் ௫௯௫

தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரிபுருசிப்பிமுத்தும் ௫௯௬

பொன்னுங்கவரிமயிர் புகழ்சோகோரோசனையும்
நன்னயஞ்செராவின்பால் நற்றாசுப்பட்டதுவும் ௫௯௭

ஈதுபத்தானவகை ளெங்கேபிறந்தாலு
மேதைபெற்றாற்போல்நல்லோ ரெக்குலத்தோராயிலென்ன ௫௯௮

உப்புங்சர்ப்பூரமது மொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கறபூர முயர்ந்தவிலைபாகுமன்றோ ௫௯௯

எல்லோருக்குமுருவ மொன்றாமிருந்தாலும்
எல்லோர்தமக்குரிக ராவரோபாவிகள்தான் ௬௱

பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலந்திரோசை விதமாகுங்கண்டீரோ ௬௱௧

நல்லதனக்கலந்தி ருதயபோற்சிராக
மெல்லமிருதச்சொல விளம்புவாருத்தமர்கள் ௬௱௨

பன்றியைக்கண்டால்யானை பாதைவிலகுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால் ௬௱௩

அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்வதுவாம் ௬௱௪

நன்னயஞ்சோபொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுமென்ன கண்டனைகள்செய்தாலும் ௬௱௫

முற்குணமேகாட்டு முறைபோர்பெரியோர்க்குத்
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணம்போகாதே ௬௱௬

சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலமில்லை
தவஞ்சேர்ரசவாதி தனக்கணுவும்பஞ்சமில்லை ௬௱௭

காலைதுயிலொழிதல் காணுமலேபுணர்ச்சி
மாலைமுழுகிமனைதனிலேசெல்லுவதும் ௬௱௮

உற்றோருண்ண லுயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே ௬௱௯

உற்றபசுவானதுவு மோர்கன்றையேயீனும்
பத்தானகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான் ௬௱௰

கோரமது செய்வதற்குக் கொம்பிருந்துமே பசுதான்
வீரமில்லாச் சற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி ௬௰௧

வங்கிஷமும் கீர்த்தியாம் வன்புலியின் கோரத்தால்
பங்கமுறாகுட்டியது பத்தினையும் கீர்த்தியில்லை ௬௰௨

நன்மை துன்மைகளைத் தெரிந்து நாட்டினுக்குத் தாட்சியதாய்
உண்மையிதுவென்ன வுரைத்தார் மனுநூலோர் ௬௰௩

தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானமும் புத்திரர்களோடு மனைவு ௬௰௪

பெரியோர்கள் சேர்வைகுலப் பெண்ணுறவும் போகம்
குறையாத செல்வமுநோய் கொள்ளாத தேகசீர்த்தி ௬௰௫

தன்மையுடனீன்ற தாய்தந்தை செய்தவமு
முன்னோர் செய்புண்ணியத்தின் முக்கியமெனவேயுரைத்தார் ௬௰௬

வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்புநீசகமு மேன்மையுள்ளபூமிமதம் ௬௰௭

காரணந்தங்கக் கவரிமான்றன்மயிருஞ்
சீரணையருமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம் ௬௰௮

நாயானதுசினந்து நமைக்கடித்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோ வையகத்தில் ௬௰௯

அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும் ௬௨௰

சற்குணத்தினாலே தர்மமனுவந்தெய்தும்
துக்கம்வாராதவர்கள் துடக்கினதுங்கைவசமாம் ௬௨௧

தாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பாக்கியமுண்டாகும் ௬௨௨

துற்பிறவிதுர்சனர்

எண்ணுமல்யாகொன்று மியார்க்குமிடர்செய்வார்
எண்ணார்கொலைகளவுக ளிறைச்சிமுதலானதுண்பார் ௬௨௩

பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்சுசியில்லா ராட்சதக்கணமாகும் ௬௨௪

அஞ்சார் தனிவழிக்கு யாவரையுமே மருட்டி
வஞ்சனையிலவெல்வார் வலியானையானாலும் ௬௨௫

ராபகலுமாறாமல் நாரியர்தனைப்புணர்வார்
சாபபாதமொழுக்கமுடன் தம்முடையபுத்தியில்லார் ௬௨௬

மாதலத்திலிந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூஷணம்பெய்க்கும் புறப்பாகுமென்றனரே ௧௨௭

கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குப்பத்துமுழம்
அம்பாணையானைக்கோ ராயிரமுழத்தினைப்பால் ௧௨௮

வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாந் துற்சனரைக்
கண்டவுடன்காதவழிக ளப்பாலேயோடலம் ௧௨௯

பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீமபானதேளுக்கு விஷமதுவும்வாலினிலே ௧௩௰

துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷமென்
மிச்சமென்றுசொல்லி [illegible] நூலோர் ௧௩௧

வேம்பிற்கசப்பும் மேலாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றுமபோதுண்டானை ௧௩௨

வாறுபோல்துற்குணமும் வாய்ந்தபுகழ்ச்சற்குணமும்
மீளாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது ௧௩௩

நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும் ௧௩௪

கண்ணில்மறுநாளைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனர்க்கு வாராதுநற்குணந்தான் ௧௩௫

எல்லாருந்தூஷணிக்க வெங்காளுங்கோளுரைப்போன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெறியுமக்கினியாம ௧௩௬

பொல்லாரைக்காண்பதுவும் பொல்லார்சொற்கேட்பதுவும்
பொல்லோர்குணமுரைத்த போதிலேதீதாகும ௧௩௭

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சாத
கர்மியர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது ௧௩௮

தலங்கள்தனைத்துதியார் தர்மகதைகேளார்
துலங்குநதியாடார் சுவடிவாசித்தறியார் ௧௩௯

வாசமிகுகீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவரா நேத்திரத்திற்பார்க்கவொண்ணு ௧௪௰

நிறை

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது ௧௪௧

சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
சிந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது ௧௪௨

சாணையிலேயாணிக்கந் தகர்ந்துமிகத்தேய்ந்தாலும்
காணுமொளிவுமொருக் காலுமதுமங்காது ௯௪௩
பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிசையிவ்வாறு நல்லோர்பெரியோர்களும ௯௪௪
ஆதாரமின்றியென்ன வாபத்துவந்தாலும
நீதிவழுவார்கள் நிறையுந்தவறாரோ ௯௪௫

ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையார்
பூராயமான புருஷோத்தமனிவராம் ௯௪௬

தன்னுடையசெய்கையைப்போல் தானெவரையும்பார்ப்பார்
சின்னமொன்றுஞ்சொல்லாதார் தெய்வப்புருஷரென்பார் ௯௪௭

சார்ந்தவரைக்காப்பவர்கள் தன்புருஷரேருவாம்
ஏய்க்கமனமறிந்து ஈவோர்புருஷரத்னம் ௯௪௮

வாராவறுமைமிகவந்தாலு மற்பர்களைப்
பாராரேசேரார் பண்பாம்புருஷசிங்கம் ௯௪௯

தாய்தந்தையாணாலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுறைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார் ௯௫௰

ஈகை

ஆறுவற்றிலூற்றாறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனைராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம் ௯௫௧
நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிறையுமுண்டு ௯௫௨
இவ்வகைபோலீவோருக் கேகிடர்கள்வந்தாலும்
எவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்வாராம் ௯௫௩
எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்லோ கூடும்பெருஞ்செல்வம் ௯௫௪
வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்குஞ்
சிந்தையுடையோர்கள் தேவரிலுமேயதிகம் ௯௫௫
தாரித்திரத்தாற் றயவில்லார்தம்மிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார் ௯௫௬
ஈயமுகாரனைத்தா னெப்போதும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும் ௯௫௭

ஈகைக்கிடையூறு

தேனிடத்திலீயுமுண்டு ஜலத்தில்முதலையுண்டு
ரவனிலத்தின்வீடுகளி லண்டவிடாய்களுண்டு ௯௫௮

சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
கெந்தமிகுதாழம்பூ கிள்ளவென்றால்முள்ளுமுண்டு ௱௫௯
கொடுக்குந்தியாகிகள்பால கோபாமலிடையூறுசொல்லி
தடுக்குங்குலாமரங்கே தானுமுண்டுகண்டீரே ௱௬௰
குற்றமுறைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்பார்
சுற்றமழிந் துடையுஞ் சோறுநஞ்சாகிவிடும் ௱௬௧

சிநேகம்

மதியிலுருமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிரா கத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம் ௱௬௨
வாவிதனிற்கொ டிகளும் மக்கீர்போற்றுழ்ந்துயரும்
வாவிகஞ்சோபுந்தூர்ம் வளருமதிலேமடியும் ௱௬௩
சேரும்பெரியோர் சிநேகமிவ்வாறாகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும் ௱௬௪

சரீரசுகம்

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார் ௱௬௫
ஓயாவழிநடக்கா ருண்டுபலகால்விரும்பார்
காயாவதுகிழங்கு கனியுமிகுத்துண்ணார்கள் ௱௬௬
கன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள் ௱௬௭
மலநீர க்கார்கள் மடப்பளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளுமே ௱௬௮
காய்ச்சுபாலநெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
எச்சில்லாவமுகை யினீர்மிகுந்துண்பார் ௱௬௯
ஆறுதிங்கட் கொருவிசைதா னவிரோசனமுன்
நாரியஞ்சமாதம்பரன்றிற் கிரண்டுவிசைபுல்குவதும் ௱௭௰
உண்டபின்புலாவி யுதகமருந்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு ௱௭௧
ஏர்கருமுடலதனிலே யெப்பிணியும்வாராது
தீர்க்காயிசுண்டாகும் க்ஷேமமென்றுசெப்பினரே ௱௭௨
மாறுப டில்லாமல் வயிசறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி நோயணுகமாட்டாதே ௱௭௩

நோயணுகல்

கல்லால்மயிரா லுங் கடுகநடையாலும்
செல்லாலுமியா லு நித்திரையில்லாதாலும் ௱௭௪

ஒழியாவிசாரத்தா லுண்டபின்புமூழ்கையினல்
கழியுமலசலங்கள் சக்கஷமாய்வீழ்கையினல ௬௭௫
பின்னுமடக்குவதால் பெருத்தசுமைசுமத்தல்
மனனுருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால் ௬௭௬
மெய்யவரும்வேலையினல் வேர்வையணிககாற்றினல்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனியுணர்வு ௬௭௭

ஏர்க்குங்கிழங்குதரு இலைவிரும்பியுண்ணுவதால்
பார்க்குள்வியாதிவரும் பாதையிதுவென்றுரைப்பார் ௬௭௮

காலையிளம்வெய்யிற் காயவோர்பிணமெரிகின்
மேலவரும்புகைதன் மேலேபடுபவர்கள் ௬௭௯

தன்வயதுக்கேறுத்த தையல்தனைப்புணர்வோர
தன்மையடனிருமி தயிர்வார்க்தேயுண்பவர்கள் ௬௮௰

நால்வரிடந்தனிலே லட்சுமியுமில்லாவாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்றார் ௬௮௧

இறந்துமிறவாதவர்

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிருகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள் ௬௮௨

தேவாலயமூசலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர் ௬௮௩

மறையோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதிமன்னர் சற்புத்திராப்பயின்றோர் ௬௮௪

காவியஞ்செய்கவிருக் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலேநாமம் பொருள்கொடுத்தமாந்தர்களும் ௬௮௫

சிரங்கோபுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் தலங்குயநின்றவர்களும் ௬௮௬

வாகாயிறந்தாலும் வையத்திலூழிமட்டுஞ்
சாகாதபேர்சொர்க்கந் தனிற்றுறைபவராம் ௬௮௭

இருந்துமிறந்தவர்

நெடுநாள்மருகன்மனை நீதகாதிருந்தவரும்
அடைவாய்மருமகன்றனம்மான்மனைதனிலே ௬௮௮

சதமாயிருப்பவனும் தமிழறியாமூடருமே
இதமாய்ககவிபாடியிரக்கப்போம்வாணர்களும் ௬௮௯

பொய்பேசிக்கடன்வாங்கிப் பிழைத்துத்திரிபவரும
செய்பகைஞரிடஞ் சேவகஞ்செய்பவரும் ௬௯௰

மாறுவதுமையுற்றோர் வல்லமருந்துசெய்துந்
தீராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர் ௬௧

மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதமொழிசற்றும் நீங்காக்கவலையுற்றோர் ௬௰௨

சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்ப்பொய்பேசி வீண்வழக்குச்செய்பவரும் ௬௰௩

மனைவிதனக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
மூனையாணராசசபை மூடராய்ப்போனவரும் ௬௰௪

ஈரேழுபேருமெண்சாணுடல்படைத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தபிணமாமிவர்கள் ௬௰௫

சம்பத்துடன்பிணியில் தான்மெலிந்துவாழ்வதிலும்
துன்பமற்றேயையமெடுத்துண்ணல்மிகவுநன்றாம் ௬௰௬

ஆணதிருமாசகன்றுவருமைவந்தால்
ஞானம்போக்கல்வியுமபோம் நாடும்பழித்திடுமாம் ௬௰௭

தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாந்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள் ௬௰௮

மெய்சொன்னாற்பொய்யாகும் விசாரமுறும்வீரம்போம்
உய்யவிருந்துவரி லுயிரோடேசெத்தபிணம் ௬௰௯

மேன்மையறிவுகுலம் வித்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிறந்துபோவதுமேமெத்தநலம் ௭௰

சேனைமருந்துசெய்யுந் திராவியாதியுற்றால்
மானலத்திற்றனக மாளுவதேயுத்தமமாம் ௭௰௧

பொருளின்பலன்

பொருள்தேடத்துக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமத
பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமுமாம் ௭௰௨

காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட
போகமுடன்காகமுந்தன் முட்டையென்றேயெண்ணுதல்பேரில் ௭௰௩

ஈய்கள்தேன்கூட்டி யெடுப்பாரிடங்கொடுத்துப்
போயலைகின்றதொருபுத்தியீனம்போலும் ௭௰௪

சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும் ௭௰௫

மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்
அயலார்பொருளுமல்ல வவன்பொருளுமல்லவென்பார் ௭௰௬

உற்றபொருள்தேட மனமுற்றாலுலகமுமே
நற்றகஞானிக்கு நாடெல்லாந்தன்னடிமை ௭௱௭
பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்
மன்னுந்தராங்கைப்பூமாலைவோல்கொண்டலைவார ௭௱௮
மன்னுமந்தராங்கைப்பூமாலைபோல்கொண்டலைவார்
தேங்கின்றவல்லவர்க்குச் செம்பொன்னொருமசகம் ௭௱௯
பொன்னாசையுள்ளவர்க்குப்போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றங்கர்ம மானதிலுமிச்சையில்லை ௭௱௰
வெட்கமில்லைபோகலாம மேலையின்னதென்றுமில்லை
இக்குணமுள்ளோர்போய்க் கிணையாகுமென்றனரே ௭௰௧

பொருள் வகை

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தசெல்வதனை
நித்தமெடுக்கிலந்த செல்லுமற்றுபோவதுபோல் ௭௰௨

ஏலமக்கு மெழுத்தினளவாகுஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி ௭௰௩

மாசவருடமென்று மாதத்துகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல் ௭௰௪

இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமர்ந்தாகளே ௭௰௫

ஸ்ரீதேவிபூதேவி சிரிப்பரிகன்றேணியாம்
மூதேவிசென்மமென்று மொழிந்தார்மனுநூலோர் ௭௰௬

மிகதர்மம்பொருளா மின்பமென்றமூன்றினிலே
சிறந்த [illegible]த்தால்தேடுபொருள் நல்லறமுமின்பமுமாம ௭௰௭

வஞ்சனையாய்த்தேடுபொருள் வர்த்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்பதனையுண்டாக்கும் ௭௰௮

கூத்துப்பார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும் ௭௰௯

கூற்றுமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போல்போய்விடுமா மைஸ்வரியமுள்ளதெல்லாம் ௭௨௰

புண்ணியமென்னாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணிணிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாதே ௭௨௧

நல்லறிவுக்கயலர்

தன்னைப்புகழ்வோருந் தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றமவிலகஞ் யயலார்க்குதவுபவா ௭௨௨

மேலோர்சொற்கேளாதோர் வேசைசதமென்றிருப்போர்
பூலோகத்தெரப்பனையைப் பொய்யென்றுரைப்பவரும் ௭௨௩

கண்டாலுறவாடிக் காணாவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாள்செய்யுங் குறைதனைவெளிசொல்பவரும் ௭௨௪

பொய்சாட்சிசொல்வோர் போற்றிவைத்துப்பிச்சைகொள்வோர்
தையல்சொற்கேட்பவருஞ் சபையிற்பயனில்லா ௭௨௫

வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தபன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராமபசாசிவரே ௭௨௬

அக்கினியைக்கட்டலா மகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருகஷ்டமிருகமிணக்கிடலாம் ௭௨௭

வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்க்குயிர்தரலாம்
வெல்லரியபேய்களையு மிரட்டியேயோட்டிடலாம் ௭௨௮

பறவைமிருகம்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரப்போகவுஞ்செயலாம் மறலியிபதுதரையும் ௭௨௯

மணலைக்கயிறாக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே ௭௩௰

வெல்லமிகக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும் ௭௩௧

புல்லறிவுகயவர்

சாதிகுணங்காட்டுந் தகைமைபோல்புல்லருக்கு
ஏதுரைத்துஞ்சற்குணங்க ளெள்ளளவும்வாராது ௭௩௨

செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமில்லை சுற்றந்தனைநோக்கார் ௭௩௩

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சாகள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாதே ௭௩௪

உண்டென்றுநாளுமுலகருரைப்பதனை
திண்டுமிண்டாயில்லையென்று செப்புமவாபேயெனலாம் ௭௩௫

தோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டாக்கால்
சீலமுடன்வயிற்றிற் செரியாதவாறதுபோல் ௭௩௬

சண்டாளரானவர்க்குத் தருமநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும் ௭௩௭

புலிக்கஞ்சியோராவேடன் போய்மரத்திலேயேற
வலுக்குங்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க உ௩௮

அன்றுபுலிபோனவுட னக்குரங்கைவேடன்
கொன்றுதின்றவாறுங் குரைமருக்குச்செய்தநன்றி ௭௩௯

துர்ச்சனர்க்குச்செல்வம்வந்தாற் றுன்பம்பழிபாவம்
அச்சமற்றுச்சற்றே யணுவுநினையாராம் ௭௪௰

குரங்கினதுவாலிற்கேள் கொட்டவொருகொள்ளிதனைக்
கரங்கொடுக்கவூரெரிக்குங் கதையாகுமென்றனரே ௭௪௧

வெந்தழலிற்றேளெடுத்து விட்டவனைக்கொட்டுதல்போல்
நந்தாத துர்ச்சனர்க்கு நன்மைசெய்தாற்றீமைசெய்வார் ௭௪௨

நாய்தனக்குப்பொற்கலத்தில் நற்பாலின்சோறிடினும்
நாயபிறர்கலெச்சில்தனை நக்காதிருக்காதாம் ௭௪௩

புல்லறிவாளருக்குப் புத்திமிகச்சொன்னாலுஞ்
சல்லியருடைய சற்குணத்தைவிடார் ௭௪௪

காலிற்செருப்பதனைக் கனகமதாற்செய்தாலுங்
காலுக்கேயன்றியது கழுத்திற்குமாகாதே ௭௪௫

கீழ்மக்களாமிகவுங் கொழித்திருந்தாலும்
மேன்மக்களாகார்கள் விண்ணவதிலேதெரியும் ௨௪௬

காடிவெகுவாய்ப்படித்தும் நல்லறிவில்லாவிட்டால்
மூடரிலுமூடரென்று முன்னோருரைத்தனராம் ௭௪௭

ஏதுமறியாதா ரின்பவறிவுள்ளாரால்
ஓதுமபெரியோருக்கொப் பென்றுரைத்தனரே ௭௪௮

கல்வியறியார்கள்நிலத்துக்கொப்பவர்க்குச்
செல்வமதுவந்தால் தீங்குசெய்வார்யாவருக்கும் ௭௪௯

தேர்கோபுரத்தினிலே செய்தபதுமையவர்
பாரிலவர்தமையும பட்டமரமாகுமென்பார் ௭௫௰

யார்க்குமுபகாரங்க ளியாதுமிசச்செய்துபின்னே
ஏற்கமதிற்செய்யவில்லையென் றுநினைத்தாக்கால் ௭௫௧

வட்டிக்கடன்கொடுத்து வைக்கும்வகையெனலாம்
கட்டாகச்செய்தவுப காரமெல்லாம்வீணாகும் ௭௫௨

வரப்பிலாமை

வேசைக்குறவில்லை வேந்தர்க்குநற்குருவில்லை
ஆசை தவெட்கமில்லை யன்பில்லைமூர்க்கருக்கு ௭௫௩
இல்லார்க்குஞ் பாத்தையர்மேலாசையில்லை
ர்க்கின்பம் கொஞ்சமதுமில்லையில்லை ௭௫௪

ஞானிக்கிசுகமுமில்லை காட்டிலோர்சாதியில்லை
ஈனமிலேச்சர்களுக்கெப்போதுமினாயுமில்லை ௭௫௫
காமிக்கொருவரம்பு கருதுமுறையுமில்லை
மாயிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை ௭௫௬
சத்தகுத்தபூசைக்குந் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை ௭௫௭

புல்லறிவு

கள்ளருக்குந்தூருமில்லை கபடருக்கு ஞானமில்லை
அள்ளளவும்பயங்களோதுகுந்தவிரனுக்கு ௭௫௮
பொய்யனுக்குச்சாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆனதொருநேரில்லை ௭௫௯
தான்பிடித்ததேபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆனசபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம் ௭௬௰
எளியாருடனெதிர்ப்போனேற்றதடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம் ௭௬௧
வந்தோர்முகம்பாரான் வனத்திலுருங்காடி
பங்கமுறுசபையிற் படிப்போன்கிடாமாடு ௭௬௨
அடுத்தோர்சீர்விளக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிட்ப் புல்லன்வலுசாரை ௭௬௩
சற்றெனிலுங்கல்விகற்றுச் சபையிற்படிசத்திப்பான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம் ௭௬௪
தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புறவானரமாம் வாய்பேசாவூமையென்பார் ௭௬௫
அம்புவியையாளு மரசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி ௭௬௬
கொட்டுக்தேள்போல்தீராக் கோபமுடையவன்முள்
குட்டியிட்டநாய்காடி கொடியவனமிருகம் ௭௬௭
மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வகுத்தசிலை ௭௬௮

பண்டிதாள்பரீட்சை

முக்கியஞ்சேர்நூலின் முறையுமினைபரித்து
பக்குவமில்லாநாடிப் பரீட்சைதனையறிந்து ௭௬௯
தேடியழைத்தபின்போய்த் தேகந்தணக்காலமே
படுகின்றநாடிபெட்டுப் பரீட்சைகளுந்தானறிந்து ௭௭௰

சித்ததவாதபித்தச் சிலேற்பனத்தின் கூறறிந்து
வந்தபிணியுமவலுவு மிகத்தெரிந்து ௭௭௧

கற்கங்கியாழங்கள் கனகுளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும் ௭௭௨

இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான் கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவகையால் ௭௭௩

எளிதானபத்தியமதி லெப்பிணியுநீக்கிவித்து
தெளிவானவாரோக்ய ஸ்நானமிகச்செய்வித்து ௭௭௪

தந்ததேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனை
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்மாதிரியெனலாம் ௭௭௫

மிக்கபிணிவந்தால் வேணபொருள்தாரமென்று
மிக்ககுலதெய்வம்போல் மேன்மைமிகச்செய்வார்கள் ௭௭௬

உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னாலேகுருவாம்
சற்றமறந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள் ௭௭௭

பாதிலகுவானால் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்ந்துவிட்டாற் பரிகாசமைத்துனனும் ௭௭௮

ஏதுபொருளானாலு மீவதுமுன்னேயனும்
காதலுடன்மற்றுநாள் கடனாளியாவானே ௭௭௯

அப்பற்பகையாளி யாவார்கள்பண்டிதர்கள்
இப்படிசெய்வோரி ருப்பாருலகினிலே ௭௮௰

தீருதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேரானபண்டிதரை மேலமருந்துகேட்பவர்பால ௭௮௧

மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாப்பிரியா
நோக்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில் ௭௮௨

கத்ததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள்
பத்தியத்தைதாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான் ௭௮௩

பட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனவீந்தாலும்
எட்டியடிவைப்ப தியலபலலபண்டிதர்க்கே ௭௮௪

சுத்தம்

வெண்ணீருடன் துளசி வில்வ மருச்சுகந்தம்
பண்ணும்புதுப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள் ௭௮௫

செந்நெலகவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல பூணும்நவமணிகள் ௭௮௬

கோதில்லாவெண்பட்டு கோடிதுகில்பாவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்பதிவ்வகைகள் ௭௮௭

கீழோர்பாலுறறிடினுங் கீழோர்களீந்தாலுங்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம் ௭௮௮

ஆசைமிஞ்சுமின்னுரதபானத்திற்கும்
பேசரியாப்பாலர்கள் பெய்ந்தசிறுநீரதற்கும் ௭௮௯

வேட்டையிலேநாய்கடித்து விட்டமாமிசமுங்
கேட்டமூடன்பட்சிகள்தான்தின்றபழங்களுக்கும் ௭௯௰

இந்தவகைநாலுக்கு மெச்சிலில்லையென்றுசொல்லி
முந்தமனுநூலின் முறையிலுரைத்தனரே ௭௯௧

எத்தொழிலுமெகுலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ ௭௯௨

ஆகாமை

மன்னர்பகையு மாதவத்தோர்தன்பகையும்
மின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை ௭௯௩

ஊரார்பகையு முற்றாருடன்பகையும்
வீராணமந்த்ரிபகை மிகுந்தபணக்காரர்பகை ௭௯௪

வல்லகணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரவாதிபகை ௭௯௫

பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினேழி லொருபகையுமாகாதே ௭௯௬

ஆறடுத்தலூரதுவு மரசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுத்தபோராறுமை ௭௯௭

தாசியுறவுபிறர் தாரமின்னார்நேசமதும்
நேசமில்லாச்சதாயாதி நேசமகாதுற்சனர்கள் ௭௯௮

தன்னுடைனங்குவதுஞ் சத்ராதிநட்பதுவும்
பன்னகதநையாட்டுவதும் பகடுநடத்துவதும் ௭௯௯

மெய்விளக்கும்போதினிலே மின்னாருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும் ௮௱

நந்நுட்டனேதிமருந்தில் காரநும்புழுகுவதும்
அஞ்சாமலெலப்போதுமலைகைகளையோட்டுவதும் ௮௱௧

ஆக்குங்கடலோட மதிலேதான்சஞ்சரித்தல்
பாக்குமதுவுண்ணல் பலநாள்களவுசெய்தல் ௮௱௨

இந்தவகையாய்ச்சொன்ன நிருபவதையுமேமனதி
லூற்றுவிடறு முயிர்களுக்கு யமமாயிதுவே ௮௱௩

ஊருர்பயிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்போம்பாவதைமந்தை யோரக்பயிரிடுவோர் ௮௱௪

பிணைபட்டுப்பொய்சாட்சி பேசுமிவர்நால்வர்களும்
சுணைகெட்டபேரிவர்கள் துன்பத்திற்குள்ளாவார் ௮௱௫

சிற்றூர்குடியிருப்பார் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளை பிற்றிரளாயப்பெண்ணைகப்பெற்றவரும் ௮௱௬

அற்பனைச்சேவிப்பவரு மலக்கழிந்துபோவதல்லாற்
சொற்பச்சிலவ னிலவசொக்களைக்குள்ளாவார்கள் ௮௱௭

அத்திக்காய்கோவைக்கா யைவிரவிதேற்றுன்காய்
சுத்தவெள்ளைகத்தரிக்காய் சோற்றுக்காந்தவிலைகள் ௮௱௮

இன்பார்க்கொருநாளும் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மநுநூலில் ௮௱௯

துறக்கோரடங்காதார் துன்னிபிணியோர்களையும்
புறம்பேசும்வஞ்சகாகள் பின்னவர்கள்பெண்டுகளும் ௮௱௰

கல்லாதவன்னொருசிற்காணுமிவரெண்மரையும்
நல்லசபையிலொரு நாளும்வைத்துப்பேசவொண்ணு ௮௱௰௧

ஆசனங்கள்தான்போடி லாயிசதுவிர்த்தியில்லை
போசனமூந்தானசமைத்தால் போமேஆயிஸ்வரியம் ௮௱௰௨

தனக்கெனவேயதான்தேய்த்தாற்சந்ததிகட்காகாது
அனர்த்தமி நமூன்றென் றழிளிஞர்முன்னோர்கள் ௮௱௰௩

யோகியொருபோதே யுண்பானிருபோது
யோகியுண்பான்மூன்று பேதுண்பாண்வியாதியஸ்தன் ௮௱௰௪

உடனொருநாட்குபோ துன்றுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள் ௮௱௰௫

வீரத்திலொப்பில்லா விக்ரமனேயானாலும்
விரியமும்வாழ்வும விளம்பி வுமாகாது ௮௱௰௬

வேந்தர்குருவெபாயர் மேன்மையுள்ளோர்மேலிகட்கும்
வாயர்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல ௮௱௰௭

காட்டுக்காகாதவரை காக்கடங்காப்பெண்டுளை
வீட்டுமந்தாரசனுக்கு மேலானமந்திரியை ௮௱௰௮

துர்சனர்சினேகமதை தொட்டாலசையும்பல்லு
இட்சணமேயசைத்து மெடுத்துவிடவேணுமென்பார் ௮௧௯

கடன்பட்டுத்தீர்த்தோர் கைச்சீட்டிலேசேஷம
விடந்தீண்டிமீண் டிலே யெவ்வளவுமேசேஷம் ௮௨௰

அக்கினியிலவெந்த அகந்தனிலேசேஷம்
மிக்காணசத்துருவை வெல்லுவதிலேசேஷம் ௮௨௧

தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதிலசேஷம்
உய்யப்பிணிமருந் துண்டதிலேயின்சேஷம் ௮௨௨

காணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மணுவும்வைக்கலாகாதே ௮௨௩

பலவிலலாமை

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாதவூர்
மந்திரியில்லாவாசல மதகரியில்லாவெம்போர் ௮௨௪

மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதகவி
தக்கதளபதிகள் தானில்லாவெஞ்சேனை ௮௨௫

பெண்ணரில்லாதமனை பிறவியில்லாதவுடல
விண்ணுனைப்பாடல வினையமில்லாவேசி ௮௨௬

கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாப்பெண்ணழகும்
தாப்பில்லாச்சீவனங்கள் தந்திகளில்லாவீணை ௮௨௭

பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுரம்
சத்தியமில்லாதவாய் தானறிபாவாணியங்கள் ௮௨௮

சந்தமில்லான்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
கந்தாப்புனலசேர் நதிவளமில்லாநாடு ௮௨௯

தேசிகனில்லாவித்தை தியானமதில்லாததீட்சை
பேசரியநல்லறிஞர் பெரியோரிலாதசபை ௮௩௰

குடிநலமில்லாநாடு குணமில்லாப்பெண்ணாசை
வடிவுற்றுவாசமில்லா வர்ணமிகுமலரும் ௮௩௧

சேகரமில்லாக்களைதை தீபமில்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாப்போசனமும் ௮௩௨

கலவியில்லாததேகங் கற்பனையில்லாதகவி
வலவிவ்வொண்ணுகின்லருப்பயன்களொன்றுமில்லை ௮௩௩

தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராசாவும் ௮௩௪

வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரு வெட்கமில்லை
மிக்ககுலப்பெண்டிர்மேன்மையிலைநஷ்டம்வரும் ௮௩௫

அன்னைபிறந்தானுண வானதெல்லாம்நஷ்டமாம்
பின்னையபிதாவிறந்தாற் பேரானவித்தைநஷ்டம் ௮௩௬

உற்றதுணையிழந்தா லுடலிலேபாதிநஷ்டம்
மற்றுமனையாளிறந்தா லன்றுதலைபோனதென்பார் ௮௩௭

பருவம்போயப்யாசம் பண்ணுவிக்கும்வித்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணாளும் ௮௩௮

அத்தரித்திரருக்கழகுடையபெண்டிரும்
இத்தகைமூன்றினு மெய்தும்பலனில்லையே ௮௩௯

வாரியிலேபெய்த்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுஞ்சோர் பிசாசுக்கிடும்பூசை ௮௪௰

பொன்னுள்ளோர்க்கீய்ந்தபொருள் போசவின்னான்கினிலும்
என்னபலனுமில்லை யென்றனமேமுந்நூலோர் ௮௪௧

அந்தணர்க்குமாவர்க்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன ௮௪௨

யார்க்குமுனாயாதவித்தையனேகவிதமாகப்
பார்க்குள்படித்தென்னபடியாதிருந்துமென்ன ௮௪௩

அன்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல ௮௪௪

தன்னால்நிருமிக்கத் தகாதவிரதமுற்றால்
என்னபலனுமில்லை யிடறுவருமுததியில்லை ௮௪௫

தருணமறிந்துதவாத் தன்மைசேர்நட்பாளர்
அருமையாய்ப்பின்னு லுதவியுதவாமலென்ன ௮௪௬

வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணுளும்
சாலவிர்த்தாப்பியத்திற் சார்ந்தென்னநீங்கிலென்ன ௮௪௭

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வரிசையுடனணிந்தால் வையத்தோரேசுவார் ௮௪௮

பெற்றதாயில்லாத பிள்ளைதன்னையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளர்க்கொடுக்கமாட்டாதே ௮௪௯

பல்லில்லாதோருமற்றப் பசியுள்ளோரானவரும
நல்ருசிகாணுரென று நவின்றார்மநுநூலோர். ௮௫௰

தெய்தவங்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ் வைந்தும் ௮௪௯

மெய்யென்றுரைப்பவர்க்கு மெய்யாய்விளங்கிநிற்குமே
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே ௮௫௰

பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றாகுமுத்தமமாம் ௮௫௧

சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதல்போல்கொடுக்கும் பண்பதுவேமத்திமமாம் ௮௫௨

வருடமெல்லாம்பாடுபட்டால் வாழைபொருமிசைதான்
தரும்பலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம் ௮௫௩

தெண்டனையில்லாவேலை சேயரில்லாமனைவி
கொண்டவர்க்குளடங்காக் கொம்பனையாளிவ்வாழ்க்கை ௮௫௪

வண்டரிணக்கம் வறுமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளர்ந்தரவுமாட்டாதே ௮௫௫

மாரிகாணுதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
ஏரிகுளமில்லாவூ ரிரவிகாணுவசனம் ௮௫௬

அன்னைகாணுதபிள்ளை ஆவினைக்காணுதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணுதவுடல் ௮௫௭

காவுகாணுதவண்டு கலைகள்காணுக்குமரன்
மேவுகொழுனனில்லா மெல்லியர்களானவரும் ௮௫௮

தோழர்காணுநேசர் சோடுகாணுப்பேடு
மீனுமதிகாணுந வெண்குமுதமானதுவும் ௮௫௯

பெரியோரில்லாதசபை பெண்கள்தனின்மூத்தாள்
உரியதியாகியில்லா வூபதினேழாமிவைகள் ௮௬௰

தாழ்வுகருமல்லாது சாந்தவளமாசாது
வாழ்வுநாணுவிளமை வாளுகுமென்றிடுவார் ௮௬௧

நல்லோர்க்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகையெழுத்தாம்
பொல்லார்க்குச்செய்நன்றி பொபகையுறும்நீரெழுத்தாம் ௮௬௨

சுற்றமுண்ணுமில்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதும்
கற்றறியானபாடுகவி கைம்பெண்ணணிகலையழகும் ௮௬௩

தூர்த்தனப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிலைவைபாழும் வீணையபலனிலமே ௮௬௪

ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குச் செய்தவுபகாரம் ௬௬௫

மேலுழுவர்நிலத்தில் விதைத்தகொருகல்விதையும்
சாலவிதைமென்றுற்றுக் கண்ணீர்க்களைத்தடுனி ௮௬௬

குதிரைச்சிருவுந்தன் கூறுகவிக்குப்புலவன்
கதிரானவாயுதங்கள் தனக்குச்சிலப்பியுமாம் ௮௬௭

வேசைக்குகட்டுவனும் விளங்குபல்ராகமதற்
காசையாய்ப்பாடுவனு மைவருந்தனில்லாவிட்டால் ௮௬௮

வத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பலநிலையே ௬௬௯

தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணோ ௮௭௰

பகவான்தியானமதைப் பண்ணாதசிந்தையென்ன
ஜெகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன ௮௭௧

சிவன்மாலையுந்துதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ ௮௭௨

இனமும்புராணகதை செவிகேளாதென்னசெவி
மூலையானபுண்பதி மூழ்காததென்னவுடல் ௮௭௩

மேவுமிவையெட்டு மில்லாதோன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலநில்லைவீண்பிறப்பாம் ௮௭௪

ஞானமறிதல் கொடையாளிதன்னைறிய்
ஆணொருபூவலஞ் செய்வானாய்விவேகியுமாய் ௮௭௫

மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்திவான்
உக்காரணவீர னுபகாரியாவருக்கும் ௮௭௬

இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனிதனென்றவனைச்சொல்லவொண்ணா ௮௭௭

சீர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம் ௮௭௮

லோபத்தனம்.

தேன்றுளியொன்றுற்கடலைத் திக்திக்கச்செய்தாலு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும் ௮௭௯

பூவிலுல்வச்சிரத்தைப் பேர்த்துத்துளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெஞ்ஞானம்வந்தாலும் ௮௮௰

ஊமைபடித்திடினு மூக்கமில்லாப்பேடிக்கு
தாமேதான்வீர்ய தயிரியமுண்டாயிடினும் ௮௮௧

நித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோயர்களுக் கிசைசற்றுமவாராதே ௮௮௨

தின்னுமனுண்ணுமற் றேடியிகச்சேர்த்து
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்குலுத்தபொருள் ௮௮௩

தெண்டம்பெரும்பிடிக்கும் திக்குந்திருடருக்கும்
வண்டமனவேசைகட்கும் வலுவந்தக்காரருக்கும் ௮௮௪

இதயில்லாப்பேடிகட்கு மெல்லாபிசாசுகட்கும்
உதவுமேயாயா வுலுத்தர்பொருளதுதான் ௮௮௫

ஆகாப்பதரெனிலு மரியவிபூதியை விளைக்கும்
வாகாப்பழஞ்சுவரும் மாவிறைஞ்சுமுன்மறைவாம் ௮௮௬

மாடுகெடாவதுவும் வையகத்திலேயுழவாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால் ௮௮௭

செத்தபிணமானாலுஞ் சிறிதுவுபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்காவுக்கேமனையாம் ௮௮௮

கல்லாலேபாலங்கள் கனதத பணதியுண்டு
அல்லற்கழுதையென்று லழுக்குப்பொதிசுமக்கும் ௮௮௯

வாறுகோலானலு மாளிகையெல்லாம்விளங்கும்
பேறுய்க்குறைந்து பிடித்தார்க்குநவிசெய்யும் ௮௯௦

ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகார
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும் ௮௯௧

நெல்விற்பதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன ௮௯௨

சீதேவியாருடனே சீசேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால் ௮௯௩

தயவாயொருவயிற்றிற் சார்ந்தவிவேகியுடன்
கயவாபிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும் ௮௯௪

உச்சிதமாயார்க்கு முதவியில்லாசார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுவூரில்நிற்பதொக்கும் ௮௯௫

செத்தபிணமதனைச் சிங்காரித்தாவதென்ன
கைத்தலத்திலேவிழுத்து காட்டிலேபோட்டுமென்ன ௮௯௬

நாயானதுகொழுக்கால் நாட்டிலசைபார்புசிப்பார்
சுபாதலோபிபர்க்கு எல்லாமிருந்துமென்ன ௫௰௭

சுபாதயில்லாமாந்த ரிருக்கின்றாரேதென்ன
ஆசையாலேமிருக மனிலேசேர்க்கவென்றார் ௫௰௮

இகழ்ச்சியினம்.

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாவிடத்தில் வேண்டுங்கொடைபலவும் ௫௰௯

ஆதரவில்லாதபெண்டி ரருமையில்லாசேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைப்பெற்றதுவும் ௬௰

ஊழிவினையுமுதிர் கொடுமையல்லாமல்
வாழ்வல்லவிரைந்துவ் வகையாகுங்கண்டீரே ௬௰௧

நீர்நுழையாவிடத்தில நெய்நுழையும்நெய்நுழையாச்
சார்பிலேபால்நுழையுந் தானதும்பாகாவிடத்தில் ௬௰௨

மீறிப்புகைநுழையும் செம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானே ௬௰௩

தக்கதாரங்கள் சானதியாப்பெரிடத்தில்
ஒக்கவிருந்துண்பதிலு மோடெடுத்திரத்தலன்று ௬௰௪

தூயவறிவில்லாச் சுதனைப்பெறுவதிலும்
பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று ௬௰௫

உள்ளன்பில்லார்களுடனட்புக்கொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தல்நன்று ௬௰௬

வெளிவிடக்கூடாதவை.

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்குமுற்றபொருள் ௬௰௭

மானம்பிறர்மான மறந்துடனே சான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தனத்தினன்வினையும் ௬௰௮

இல்லறத்தின்கேவலர்கள் யாவரிடமீதுபத்துந்
சொல்லவொண்ணாதினமென்று சொன்னார்மனுநூலோர் ௬௰௯

தன்னசுத்தாளன்றுமறு தாரமேலாசையுற்றால்
பின்னொருவர்தாரமது பெண்டீனாச்சேராரோ ௭௰

பறையன்பறையனல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்ப்
பறைவோன்பறையனென்று பகர்ந்தாரேமுன்னூலோர் ௭௰௧

ஞானமுஞ்சற் குணமுநாணுமில்லான்கற்றகவி
ஈனப்பறையூர்வீட்டி லிருக்குங்கைகாசலமாம் ௭௰௨

தண்ணீரின்னன்மை சுறையுவற்றினாலழியும்
பெண்ணார்கள்நன்மை பிறர்கமலத்தாலழியும் ௱௰௩

கோதில்லாமாதவசு கோபத்தினாலழியும்
வேதகுலநன்மை விபசாரத்தாலழியும் ௱௰௪

மன்னவர்கள்நன்மை மனுநீதிபாலழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி ௱௰௫

பொல்லாதன்னகத்துப் பெண்ணாலழியுமென்று
வல்லோர்கள்முன்னால் மனுநூலுரைத்தனரே ௱௰௬

பருவதமும்பார்க்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தி லரியரனும் வாழ்வதுபோல் ௱௰௭

பூமியிலேதங்கள்மனைப் பெண்ணாள்பிறந்தவிட
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள் ௱௰௮

கேடு.

காவலர்கலாணை கடப்பதுவுமேயடங்கா
காவுமிகுகோபமுட னமதுனாகேளாவடிமை ௱௰௯

ஆநாயமின்றி யதிகச்செலவுகளும்
கர்தாரக்கேளாச்சொல் கவியில்மிச்சங்கண்டெழுத்தும் ௱௨௰

சாட்சியின்சும்வழக்கும் தயிரியமிஞ்சுக்கவலை
பேச்சில்சரசமிஞ்சப் பேசுபரிகாசமதும் ௱௨௧

பத்தாவின்சொற்கடங்காப் பாவதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிடத்துன்பமுமாம் ௱௨௨

ஓரவிவகாரமா யுயர்ச்சோர்க்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க உலகமதுநடுங்கும் ௱௨௩

உப்பிட்டபாண்டமிலே யுதிர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வுடபோ முற்றார்பெற்றார்பாழாம் ௱௨௪

மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வள் முடிவில்நரகமெய்தும் ௱௨௫

எந்நேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
இன்னஞ்சிறியாரிணக்கந் தீராக்கொடுங்கோபம் ௱௨௬

வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசாரரய்ச்சேவகங்க ளாறுமிவைகேடெய்தும் ௱௨௭

தேடாப்பொருளழித்தல் தீராதகோபமரண்டும்
கேடெய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே ௱௨௮

ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால
மானேனுர்மேலாசைதரும் வாழ்வும்போந்துக்கமுமாம் ௯௨௯

என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுயுவுண்டாம்
மனமறிந்துசெய்நன்றி மறந்தார்க்கேடேற்றமில்லை ௯௩௰

இளமைசபட்டாற்று தேனமுயமூதகண்ணீர்
வமிசத்தைத்தேயங்கு மரமுங்கூர்வாளெனலாம் ௯௩௧

நீங்காணவாங்காருஞ் செல்லுமிடமானதன்றித்
தாங்காவிடஞ்செலுத்தில் தப்பாமற்கேடுவரும் ௯ ௨

தாழ்ந்தாருபர்ந்தார் சரியாமெனவறிவால்
ஆய்ந்துமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும் ௯௩௩

சரியானபேரையன்றித் தன்னிலதிகபலப்
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்

இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுற்பாதம்
புத்தப்பிரதானமாய் பொல்லாங்குசெய்பவர்கள்

புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரர் யற்பாயிசாவார்கள்

வர்க்கையுடனிதமு மேதேனுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்

பின்னாலேதுன்பம் பிணக்குமிகவுண்டாகும்
அந்நாளோராகீரியினுலைத்துகுடிக்கெட்டவிதாக்கும் ௯௩௮

சத்ராதிசொல்லைத் தனதாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும் ௯௩௯

கொடுத்தகடன்கேட்டாற் கோபங்களுறறவரும்
எடுப்பாய்பெரியோரை யென்னுறந்பேசினவா ௯௪௰

பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேரிட்டுப்பாராதார் ௯௪௧

இனிபபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள் ௯௪௨

பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரெழுவருங்கெடுவர் பேய்நாய்ப்பிறப்பாகும் ௯௪௩

கூடப்பிரிவதினாற் கொடியதுநாதிகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே ௯௪௪

கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவுந்
திண்ணமுடன்முன்பின்னாய்ச் செப்பினாற்கேடுவரும் ௧௪௫

வித்தைதனமைசுவரிய மேலுங்கிளைகூட்ட
மற்றும்பயருழியி னாலுமகிழ்ச்சியினால் ௧௪௬

வர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தால்
தீர்க்கமிடிகேடுவருந் திண்ணமவனோர்வள்ளுவனா ௧௪௭

நெஞ்சிற்பயமதுகா ணேரிடையாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்கட்குகேடுவரும் ௧௪௮

இணையளவுநன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அணுப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால் ௧௪௯

அந்தணர்க்குங்கோவுகட்கு படாதுபொல்லாங்குசெய்த
நிந்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார் ௧௫௰

ஆலவுடன்தன்பிலமுப்புக் காகவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செய்வாரேயாமாகில் ௧௫௧

நீண்டதொருதன்நிழல்தா னின்றடியிலசைவதுபோல்
ஆண்டுநூறானாலு மவரைவிட்டுப்போகாது ௧௫௨

முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும்
பின்னாலேழேழ் பிறப்புமவிட்டுப்போகாது ௧௫௩

செய்ததொருதீவினைதான் செய்தவர்க்கெப்போது
மெய்துமென்றுசொல்லி விளம்பினார்வள்ளுவரும் ௧௫௪

அரிது.

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடும்பேடும் ௧௫௫

நீக்கிப்பிறக்கரிது நோய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றஞானஞ் சிறந்தகல்விகற்குணங்கள் ௧௫௬

வாரதரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நோய்த்தரிக்கரிது நெஞ்சிற்றரித்தாக்கால் ௧௫௭

நீணிலத்திற்குன்றாமல் நெடுநாள்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே ௧௫௮

இனிது.

இனிதினிதுவேதாந்த மினிதினிதுமெய்மருள்ளம்
இனிதினிதுசாணக்கண் ணேதுக்கேளாச்செவியே ௧௫௯

கொடிது.

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருபதிற்கொடிது இளமையினிலேவறுமை ௧௬௰

அதிற்கொடியகாமருந்தி லகலாதவெவ்வியநோய்
அதனிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம் ௬௬௧
அதனில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதனிற்கொடிதுன் னுடவேளோடிறக்குவதே ௬௬௨

பெரிது.

பெரிதுபெரிதிந்தப் பேருலகநான்முகன்றன்
வரியைப்படைப்பாக்கு மவன்மால்வயிற்றுதித்தோன் ௬௬௩
மாலோகடல்துயின்றோன் வாரிதருமுனிவன்
பாலெடுக்கமாமுனிவன் பண்டொடுக்கங்கும்பமதில் ௬௬௪
கும்பமோபூமியதற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு ௬௬௫
சேடனுமையாள் சிறுவிரலினாழியாம்
ஈடில்லாதவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம் ௬௬௬
தொண்டரிதய தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருமைதனைச் சொல்லமுடியாததுவாம் ௬௬௭

முக்கியமுள்ளது.

தலத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில் ௬௬௮
வேதத்திற்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு ௬௬௯
நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவசிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணமாம் ௬௭௰
வாரத்திலாதித்த வாரமந்தரான்மீனில்
பேருமறவாதிரையாம் பெருமுனியில்நாரதனும் ௬௭௧
தனத்திற்குபேரனன்ன தானமேதானமுமாம்
மனுக்களிலேராஜாக்கள் வாரியிலேபாற்கடலாம் ௬௭௨
மோகத்திற்புஷ்கரமாம விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகங்களிற்சிரேஷ்டமசுவமேதமென்பார் ௬௭௩
மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுபசுவில் கங்கைநதியாம்நதியில் ௬௭௪
தமிழில்சத்தியராந் தந்தியிலைராவதமாந்
தமனியமாம்லோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம் ௬௭௫
பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம
மச்சத்திலேமகரம வடிவதனிலேரதியாம் ௬௭௬

கற்பிலருந்ததியாங் கபிலபாஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும் ௬௭௭
அசுரர்குலத்திற்பிரக லாதனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும் ௬௭௮
சங்கினத்திற்பாஞ்சசன்யஞ் சந்திரனங்கிரகத்தில்
சங்குரபதவியிலே சாயுச்சியமாகும் ௬௭௯
போகத்திலிந்திரனும் புஷ்பகமாமவாபனத்தில்
வாகொத்தவில்விறத்தின் வாழ்விலேமைந்தர்களாம் ௬௮௰
உடையிலேபட்டாடை யுத்தியிலேயூகிரங்கிரி
கொடையிலேதான்கர்ணன் குணமூன்றில்சாத்மீகம் ௬௮௧
மன்னும்புராணத்தில் மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம் ௬௮௨
ஆடுமீனிராறி லதிகந்துலாமாகும்
வாடாதநுண்ணியநூல் வள்ளுவனார்சொற்குறளாம் ௬௮௩
சுவையாரிலேலவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடந் தேசத்தில்சோழதேசம் ௬௮௪
பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோரேயதிகம் ௬௮௫
ஓசையிலிடியேறு ஊரிலயோத்தியதாம்
ராசரிலேராசாதி ராஜனம்விக்கிரமன் ௬௮௬
அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குமே
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே ௬௭௮

கொடுமையாலழிந்தவர்.

தக்கனிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்நிமியும்
மிக்கானவாகுலங்கள் மேனளிலேநகுலன் ௬௮௮
பங்கமுறுகின்ற சிசுபாலனறுவர்களும்
நிந்தனையினாலே நிர்மூலமானார்கள் ௬௮௯
கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
லஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கவந்தன் ௬௯௰
பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பனகி
வாதுபுரியுந்தந்த வக்கிரனுமென்பவனும் ௬௯௧
சகடனுடன்வில்லவனுஞ் சலேந்திரன்மகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனுளதர்சூரன் ௬௯௨
மிஞ்சுகேசிடியே ரா மியர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினாலிவர்கள் வம்பிசத்தோடேயழிந்தார் ௬௯௩

சூரனுடன்தாருகனுந் துர்ப்பானுகோபனுடன்
வீரமிகுசிங்கமுகன் மின்னுளசோமுகியும ௬௰௪

தீயராமந்தத் திரிபுராளானவரும்
மாயமதுகைடவர்கள் மாயாவிதுந்திபியும் ௬௰௫

மாலிசுமாலியுடன் மகிடாசூரன்சமபாம்
காயசேயாநிவாத கவசருடன்தாடகையும் ௬௰௬

இடும்பன்பகாசூர னிரணியாட்சதனென்போன்
கடுங்கோபச்சகரான் காலகதியாலழிந்தார் ௬௰௭

தாசியங்கம்.

புருவனெறியாமல் விழிபுரளாமலேமெயில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல் ௬௰௮

அணுவளவுந்தலையை யசைக்காமலேமிடறு
தனில்பொருலாமல் சுருதிதந்திலயக்கியானம் ௬௰௯

நீதியாய்த்தொனிவீணை நேராயதிற்றந்தி
நாதமிட்டுப்பூசை ரண்டுஞ்சரிபாகம் ௭௰

அமுர்தரசதாளி யாய்மதுரசங்கீதம்
சமரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழியுமுயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலபிநயமுங் காட்டுமவளேபாத்ரம்

பாதாளச்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
வரதாளஞ்செய்பவனே மத்தடியாமென்றிடலாம்

பலராககீதங்கள் பாங்கானதாளங்கள்
நலமாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும்

தாளத்திலேநினைவு தரித்துநடனமிடும்
வாளுற்றசற்பாத்ர மறிவனேநட்டுவனும்

தாளலயமார்க்கந் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பதச்சேவை விழைவோன்பரிசனனும்

வேசையர்தமில்லம்விட்டு மேல்விடமுஞ்சென்றக்கால்
காசுபணமற்பமுமாய்க் கணிசங்குலைந்துவிடும்

வேசையர்கள்வரலாறு.

மிக்கவிலைமாதர் விடுசந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுதான்

சந்திபிற்பாய்மெத்தையதாங் தண்ணீர்பந்தலதாம்
பந்தமுறுதேகம படிந்துறையதென்றிடலாம்

சூதாடிசோலைதனில் துடைகள்தண்ணீர்ப்பந்தல்
வீதியிலேகட்டிவைத்த மிககதலிமரம்

மையாடுங்கண்ணியவள் வாரணிந்தகொங்கைரண்டும்
கையாடும்பந்து கடையெலுமிச்சம்பழமாம்

பாகமுறுசெவ்வாய் படிகமதிற்கொப்பாகும்
ஏகுமவள்மோகமது எட்டிக்கனியெனலாம்

பாசமுடனிவ்வாறு பார்த்துடையார்தீங்குபுரி
வேசையர்மேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மையல்ல

பெண்களால்பங்கமடைந்தவர்.

சந்திரனுமிந்திரனுங் கன்னுடலிற்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும்

எண்ணறியவாழ்வுடைய யிராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள்

சுந்தோபசுந்தரெனுஞ் சூரரிருவர்களும்
அந்தமிகுமோகினிமே லாசைகொண்டுமாண்டார்கள்

வையகத்திலொப்பில்லா மாபிலவானுமெழில்சேர்
தையலைக்கண்டால் சவுரியமுமில்லாது

மானார்குணங்குறியிவ் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும்

புருஷன்வாக்கியபரிபாலனஞ்செய்தவர்.

ஆதியருந்ததி பின்னானுங்கவுசிகையுந்
சாதுகுணச்சாலை சந்திரவதியென்பவளும்

உத்தமியில்மிக்காக வோதுநளாயினியும்
பத்தாவின்வாக்யபரி பாலனமேசெய்தவராம்

மூன்றுயுகத்திலும் யமனானோர்

கிரேதாயுகத்திற் கெடிகாலிரேணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணாகும்

துன்னுதுவாபரத்திற் றுரோபதையேகூற்றுவனும்
இந்நாள்கலியுகத்தி லில்லமெலாங்கூற்றுப்பெண்

பெண்களுக்குசுவாதீனமில்லையெனல்

பெற்றோர்கள்பேதையிலும் பின்பருவத்திற்புருஷன்
மற்றுவருமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம்

மூக்காலும்பெண்ணுக்கு முயர்ச்சியொன்றுமில்லாதால்
மிக்கானபெண்சன்மம் வீண்சன்மமாகுமென்றார்

புருடனைதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதானவான்சன்மத் ததிகமென்றுசொல்வினரே

பத்தாவேதெய்வமென்று டணிந்தேற்றுங்கற்புடையா
ளூற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும்

மெத்தவழகுடனே மேன்மையுள்ளமின்றனோர்
புத்திரனைப்பெற்றவன்றே பொழுகுமேன்மைகளும்

பெண்கள்வரலாறு.

மேலானகன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குராகாகாபபேருமில்லை

சதிராய்த்தன்னில்லம்விட்டுத் தனிவழிபோமின்னார்க்கும்
பதிவிரதாதாபமில்லை பங்கம்வந்துசேருமோம்

சரசகுணமில்லாத தையலரைச்சேர்வதிலும்
விசைவாகச்சர்வியாக வேஷமுற்றல்நன்றாகும்

அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் முலைகண்டாற்போதாதோ

பேரிளம்பெண்கள்பல பேரைப்புணர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று

துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்கூட்டுநன்றும்

பெண்ணொருத்திபேசினாற் பெருவுலகமும்நடுங்கும்
பெண்ணிருவர்பேசினாற் பெருவானின்மீனுதிரும்

அலைவாரியுஞ்சுவறு மாயிழையார்மூவருக்கு
பலபேர்தான்கூடிலென்ன பாடுபடுமோபூமி

ஆசைகொண்டாள்போலே யபிநயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமறியாமல்

அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாம் நாயினிலுங்கீழாவார்

கர்மகாண்டம்.

பூதலத்தோர்க்காகப் பொதியைமுனிநாயனுமுன்
தாதலுற்றுச்சொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம்

தர்மமில்லாதார்க்குச் சளமாமகாநோயும்
கர்மவிபாகிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன்

தெய்வவுருவழித்தல் சீவசெந்தைவதைத்தல்
நவநூதனைத்தாமே மனம்நோகவேபேசல்

நந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல ராதலரும்பூகொய்தல்

இட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்குங்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே

நாகமுட னூர்வனங்கள் நலலபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு

குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவுரைத்தார்

உத்தமனைப்பழித்து உதாசினங்கள்பேசவதும்
பத்தர்சித்தர்பாவம் பற்றித்தொடர்ந்ததினால்

ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோதுபடச்சினந்து கொடுங்கோபஞ்செய்வதினால்

கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்ப்பித்தந் தலைக்கேறியேபிதற்றி

பண்பாய்பலகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகத்தட்சணா மூர்த்திமொழிந்தனரே

பச்சைமரங்கள்தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்

குளிர்ந்தமரத்திலை காய்கொம்புகளை முறித்தல்
அருந்தமலராப்பூவை யனவாதங்கிள்ளினதால் தநிம

மண்டைக்கரப்பன் வாயுவொருகலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தானபீனசங்கள்

மாறுப்க்கபாலத்தின் வாய்வானநோய்தானும்
வீறாய்வந்தெய்துமென்று விளம்பினார்முனிவன்

வித்தானதையழித்து மேலுமதைத்தின்றதினால்
பத்தியுடன்கன்றுக்குப் பால்விடாத்தோஷமதால்

பாலகரையழித்துப் பச்சைமரப்பிஞ்சுகளைச்
சாலயிளம்பயிர்கள் தன்னையழித்ததினால்

மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லை
ஆறாலும்பாவிகள்தா னங்காங்கஞ்சொல்லவொண்ணா

சூரியனைநோத்தரியாத் தோஷமதனாலும்
நீரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுச்சுட்டதினால்

மடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால்
துடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால்

கல்லகிழ்மரத்தை நாருரித்துக்கொண்டதினால்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனைவெட்டினதால்

பசித்தோரிருக்கவவரைப் பாராமலுண்டதினால்
நிசமாய்ச்சுரதோஷம் சேருமென்றேயுரைத்தார்

மாதாபிதாவை மனம்நோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினால் ௧௬௰

வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரென்றுபல ரைவரையும்பழித்தல்

தெய்வநிலைபழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்

ஊனதைத்தின்ன உயிர்வதைகள்செய்வதினால்
மானார்கற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால்

புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியங்களைக்கெடுத்துத்
தண்ணீர்குளமேறி தன்னையுரைத்துவிட்டும்

திருப்பதளப்பதுவும் திரைகள்குறையவிற்றும்
மறுப்படாநீரில் மலமூத்திரங்கள்விட்டும்

துராகதமாயிவ்வாறு துன்பங்கள்செய்தவர்கள்
கிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்

பொல்லாக்கடுங்கோபர் பொய்யேமிகுந்துரைக்குஞ்
சொல்லுவதைபின்மறந்துத் தூஷணித்துப்பேசுபவர்

உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும்
திண்டுமிண்டாச்சிலசெர்ச்சைநிறைக்கவேசொன்றவர்க்கும்.

கன்னத்திற்புத்துகண்ணேசிலிப்புருதி
கன்னத்துற்சூலை கடிதானபல்லரணை

தந்தரோகங்கள் சகிக்கரியாவாய்ப்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமல்வந்திடுமாம் ௧௭௰

சற்குருவைத்தூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்

பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாப்பூவிலே காயுதிரவடித்தவர்க்கும்

வண்டிகடிகாரப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்மாமுனியும்

பத்தர்சிவசித்தர் பரமசிவயோகிகளைச்
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும்

வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தாற்சீவசெந்தைக்

கொன்றகொடும்பாவிகட்குக் கொடிதானமார்பாணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்

காங்கிசையாப்பெண்கள்தமைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கியவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்

மின்னளைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்னவனைத்தூஷணமாய்ப் பேசிப்பழித்தவர்க்கும்

தப்பிதமதாகப்பொய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும்

பலதரமுயிர்வதைகள் பண்ணுவதைகண்டிருந்தும்
விலக்காமற்பார்த்திருந்த வேட்டைநாயானவர்க்கும் தஅம

கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுநான்மறையும்
தொண்ணூற்றியாறுநோய் தொடருமென்றூர்மாமுனியும்

பேறனதேதுமுயிர்ப் பிராணிகளைத்தான்பிடித்து
கூறுகத்தாக்கிவைத்துக் கொண்டகொடும்பாவிகட்கும்

கோவதனைகொன்றவர்க்கும் கொடிதானகண்ணிவைத்து
சீவசெந்தைநீர்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்

அலரும்பிராணிகளை யமுக்கியதன்னுடைய
தலையறுத்துமிக்ககுடல் தன்னையெடுத்தவர்க்கும்

ஈனமிறக்கமற்ற யிராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாய்வுகந் தழிக்குமெனவுரைத்தார்

இறந்தவேமுற்பிறப்பிற் சேயினமுமாதர்தங்களுக்கு
மருந்திடுசெய்து மயக்கிக்கர்ப்பழித்தவர்போல்

மயலானபெண்போலே மறுஜென்மத்தினிலவளும்
சயரோகமாகவந்து சார்குவாளெனவுரைத்தார்

மார்க்கமதில்நிற்கு மரங்கள்தன்னை வெட்டினவர்
பூக்கமழுநல்மரத்தின் புறத்தொளியைத்தானுரித்தோர்

விணிலேபூடுகளை விருட்சங்களை முறித்தோர்
ஊனுன்றகோல் முறித்தே போடாமற்செய்தவர்கள்

சிம்பமாய்ச்சிவசெந்தின் கங்கங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துங் கொடும்பாவஞ்செய்தவர்க்கு

வாகங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூதலுடனிருங் குளிரும்வருமென்றனரே

பலபேர்வயிறெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
நலஞ்சேர்பெரியோரை நத்தடுக்கப்பேசினர்க்கும்

மாறுமனக்கவடு வைத்துவெகுபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்பசிக்கவுண்டவர்க்கும்

சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்துசூழுமென்றார்

பட்சிமிருகங்கள் பாம்புமுதலானகளை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலங்கவர்க்கேயெய்துமென்றார்

சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டுகளைக்
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார்

ஒப்பனையானவை.

வெடுக்கென்றசொல்லானை மேலோரகத்தில்வைத்தால்
மடத்தையுங்கட்டியதில் வங்குரங்கைவைத்ததொப்பாம்

எண்ணமல்வஞ்சகப்பெண் ணின்சொலைநிச்சயித்தால்
மண்குதிரைதன்னைநம்பி யாற்றினிற்சென்றதொக்கும்

அகாமிமயமுள்ளானெனிலு மறிவாளனைச்சேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த மானதனைநிகர்ப்பார்

தன்னவரேயானாலுஞ் சார்பறிந்துசேர்தல்நன்று
துன்னுசுடர்விளக்கெனிலுந் தூண்டுகோல்வேணுமதாம் தா

கடவுள்விதிவெல்லக் கடவரெவராருமில்லை
மடவிலேயிட்டாக்கால் குடவிலேதாங்காதே

நிலையாம்நிமலனடி நேர்ந்தாக்குறையுளதோ
மலைமேலிருப்பவனை வந்துபன்றிபாய்ந்திடுமோ

பெரியோர்திருவுளந்தான் பேதித்தலாற்றிர்ப்பார்
கரிமலைசாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ

கடன்தெவருஞ்சொல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கிலசந்துமொரு வோசைபரியாதே

மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துச்சொன்னாலும்
இட்டமுற்றதன்குணமும்போ யெய்யாதுநற்குணந்தான்

கடையாரால்மேலோர்க்குக் கருமங்களும்விழலாம்
மூடப்புல்லுந்தண்ணீரில் முக்கலத்தையேயழிக்கும்

வலியோனைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சுவரோ
மலையேதானெக்காலுங் குருடனெய்யாட்டானே

தலையானோரைச்சேர்ந்தால் தாழ்வில்லைதாழ்வுவந்தால்
புலிக்கடுமைப்படுங் கறிக்காசைப்பட்டதொக்கும்

மெலிவாகிலுமேலோர் மேற்செயலேசெய்வார்கள்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்தமாட்டாதே

விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே தாகம்

நேசருடன்புறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழையாவாறுகும்

ஏர்க்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றும்போகாது
ஊர்வாயைமூட வுலைமூடிகாமுண்டோ

எட்டாக்கனியதனுக் கோசைபட்டுமென்ன
தொட்டுக்காட்டாதவித்தை சொட்டுப்போட்டால்வருமோ

காட்டுச்சுரைக்காய்கறிக்கு நாட்டினுலெய்தமது
ஏட்டுச்சுரைக்காய்கறிச் கெய்தாதொருநாளும்

மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றிருந்தால்
ஏறவிட்டேயேணிதனை யெடுத்துவிட்டவாறுகும்

வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்நில்லா
ஏழைசொல்லம்பலமு மேறாதுகண்டீரே

கொடையாளியேவறுமைக் குள்ளாகிலுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே

விற்பனக்குருமுடன் மேலாம்பரமானல்
குப்பையுயர்ந்து கோபரமுந்தாழ்ந்ததொக்கும்

இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புநப்புங்காலம்
கெட்டவர்க்குற்றோர் கிளைதனிலுமில்லையில்லை

இணக்கமுடன்நல்லபுத்தி யெவ்வளவுங்கேளார்க்குரைத்தல்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறாகும் ௩௱௨௰

காவிபயிர்தின்றுமற் காப்பதுவேவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை

நிலையானகாரியமு நில்லாதுப்கிரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் முலைப்பால்மருந்தல்லவோ

கூடாவொழுக்கமகளிர்.

பார்ப்பளவில்திரும்பிப் பாராள்தாத்தமொழி
கேளாய்மருவிகள் மேதுவுமேசொல்லாளாம்

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமல்புரிவாள்
உள்ளன்புக்காரருடன்போயுஞ்சண்டைசெய்வாள்

ஆடையுடனுபாண் மடைக்காய்முதல்கொடுத்தால்
வாடாள்புரங்கையி னுலதனைத்தட்டுவாளாம்

அங்கையாற்றொட்டா லாடலசம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைபபோல்பார்ப்பாள்

அபலாருடனே விளையாடியேகூடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தால்

மெய்யதிலேநோய்கள் மிகவிளைவுர்க்கமிட்டுப்
பொய்யாணையிட்டுப் புறங்காட்டிப்படுப்பாள்

முந்தியுறக்கிப்பெரு மூச்சிவிட்டுயெத்தனையோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேயிறங்காள்

ஆடிடத்திற்போடாவென்றவன் கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள் ௩௱௩௰

காடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலுங்
கூடாவொழுக்கக் குறையிதுவாமென்றனரே

அபிபுற்றமகளிர்.

ஆடவர்களெந்நாளு மாசைகொண்டபெண்குறிப்புங்
கூடாவொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம்

பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணுயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள்

உள்ளன்புகாட்டா ளோங்கிபெருமூச்சிவிடாள்
தன்னாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிடாள்

பாங்கியனைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்த்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி

பிரசெவனையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்துதும்மல்தும்மி

தலைவனன்புவைத்தாலுந் தன்னுடன்பொய்யன்று
தலைவன்மொழிகேட்டுமவன் தன்தொழிலையும்மகிழ்ந்து

ஆண்டவன்வீட்டுக் கடிக்கடிதான்போதல்வரல்
ஆண்டவனைக்கண்டா லறக்கணிசிநாணுதலும்

கொம்பனையார்க்குள்ளன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூலுகளில் முன்னோருரைத்தனரே

பெண்களுடையதத்துவம் பத்துக்குவிபரம்.

மிக்கயின்னூலில் மேன்மைகுறிப்பரிய
தக்கதொருபெண்கள்பத்துத் தத்துவத்தைச்சொல்லுகிறோம் தாசமி

பொன்னிறமும்மல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வன்னமலர்முகமு மாசற்றவமூர்தமொழி

தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோடும்வாழ்பவ ளிவள்தெய்வதத்துவமாம்

இரக்கம்வணக்க மின்பமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசவாசம்

வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடர்குள்தத்துவமாய்
முன்சொல்லும்நூலதனில் முறையிலுரைத்தனரே

நித்திரைமிருக்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி வீடெல்லாம்போய்த்திரிதல்

சுத்தமில்லாதேகஞ் சுசியில்லாப்போசனமும்
நத்துகின்றயின்னுள் நரகதத்துவமாகும்

ஆற்றில்குளத்தி லலைகடலிலேமலைமீ
லேற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம்

நாணமில்லாமை யெந்நாளுங்கொடுங்கோபம்
பேணுதலாளேயியக்க மாமென்றுசொல்லுவதாம்

பரிமளசுகந்தாதி பகஷிரத்தினவாபரணம்
பாசசங்கிதவித்தை தன்னில்வெகுவிருப்பம்

சாந்தகுணமுந் தர்மசிந்தைநற்புடையாள்
காந்தருவதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம் ௬௰௫

வெட்கமில்லாமை மிகுந்தபலபோசனமுந்
துறக்கத்தவாசந் தூடியானவார்த்தைகளும்

ஊட்டினசரீர முடையழுக்குமாமிசமு
மூட்டமதாவுண்ணல் முறைமையில்லாதுர்நடத்தை

நித்திரையில்லாமையிவை சேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்

அக்கினிக்கண்ணு மழுகுசற்றுமில்லாமை
லக்கணையாயாடவரை வலிப்பிடித்திழுத்தல்

மாறுபாடானமன மல்லுகட்டிப்புணரும்
நாரியவள்தானே ராட்சதரின்தத்துவமாம்

நீரிடத்திலாணு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தல் மயிர்தூவுந்தூறுதலை

வேறுமுகம்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தில் கன்னியவளாகுமென்றார்

கூடுகின்றவாடவரை கூர்நகத்தாற்பல்லதனால்
நாடிக்கடிப்பதுவு நாணஞ்சற்றில்லாமை

நிறமதுவும்பங்கமதாய நேத்திரத்தால்மருட்டல்
குரங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றார்

திண்டுமிண்டானசொல் தேகசுத்தமில்லாமை
வண்டிவெடுத்தகுரல் மல்லுகட்டிப்புணர்தல் ௬௰௬

மழுமாரிகண்டவரை வலிப்பபிடித்திழுப்பாள்
கழுதையின்தத்துவத்தின் கன்னியளாகுமென்பாள்

வையகத்திலேமேலா மனுவாளன்சொன்னபடி
பொய்குழலார்சாதி மூன்றின்குறியுரைப்போம்

மானைநிகர்த்தவிழி வனசமலர்முகமுந்
தேனைநிகர்த்தமொழி தேமற்படர்ந்தவுடல்

சுருண்டுநெறிந்தகுழல் தும்பிப்பிடிநடையுந்
திரண்டகோவைகனிவாய் செண்பகப்பூத்தேகமுமாம்

மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு மழகில்ரதியெனவும்

வட்டமாய்த்தங்கநிற மானவிளமார்பும்
இட்டமுறுகல்விக் கிசைந்திட்டசற்குணமும்

தர்க்கமிலாமின்கோபி சாப்பாடுமெற்பமதாம்
இக்குறியின்மாதவளு மின்பமுறுமான்சாதி

பெட்டைக்குதிரைசாதி.

உயர்ந்துகுளிர்ந்தவுச்சி யுட்குழிந்தகண்ணகண்கள்
உயர்ந்துபருத்தகொங்கை யுதபெருத்திருக்கும்

சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலவிடைபருத்துத் தாழ்ந்துபோலேவயிறும்

அடக்கமொன்றுமில்லாமை யல்குல்பணைத்திருக்கும்
மடக்கொடியாள்பேசுமேன்ற வாய்மைகுளறுதலாம்

போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்

திராவெறுப்புஞ் சிவந்தபருவுடலுங்
கூறுமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்லினரே

பிடியானைச்சாதி.

சாலப்பருத்தநெற்றி தாடைசெவிநாசி
காலுடனேகைதோளுங் கழுத்துமிகப்பருத்து

சுருண்டுசிவந்தமயிர் தொங்குமதரமுமா
முரண்டுநிதஞ்சண்டைமொழியுமிடிபோலாய்

அல்லும்பகல்கல்வி யானதிலேசிந்தையுமாய்ப்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை

யார்க்குமனுகூலி யானைமதநாரி
பார்க்கும்பணிந்தி அந்குலமாமல்குலமு

பிடிவாளவுஞ்சண்டைவிடாள் வெட்கத்துக்கஞ்சாளாம்
பிடியானைசாதியென்று பேசினார்முன்னானோர்கள்

யின்னம்சிலநீதி யெடுத்துமேகூறவென்றால்
வன்னமாயின்னால் வளருமெனமுடித்தேன்

வாழி.

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி

தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி
நேயசெங்கோல்செலுத்தும் நிருபர்மிகவாழி

கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே. தாஅய

மனுநீதிகாதல்.

முற்றுப்பெற்றது.

சாற்றுமொருபெரியாசிரியம்.

பார்புகழும்மனுநீதிகாதலெனவேபகரும்நூலசம்
பலருமிதை யுணரும்வகை தமிழ்வழியாலியபவேண்டி
சார்புகழ் பிடாரிகர்நாராயணசாமிவள்ளல் தவத்தாலுற்ற
தக்கமதி சிதம்பரவேள் தனதுசொந்தவச்சுநிலை
சீர்புகழ் சிரோன்மணிவிலாசமெனுமெந்திரத்திற்றிறமாய்த்தானே
திருமணவூர் முனிசாமிதனதுவச மொருவாறு திருத்திவாங்கி
ஆர்க்கவிழுமுலகரியபதித்தளித்தகருணைவாழிகாமெல்லோரும்
கண்ணுற்றோர்கதிர்மதிபோல் வாழ்கவெனவெண்ணுற்றோமே.

உ

கடவுள் துணை.

அட்டவணை.

மனுநீதிகாதலின் - அட்டவணை

முற்றுப்பெற்றது.

உ

கடவுள்துணை.

அறிக்கை.

இவ்வுலகின் மாட்சிமைதங்கியநேசர்களே முன்னோர்களாருண்டானநீதிநூல்களிற் சொல்லியசாரங்களைத் தெளிந்தெடுத்துச்சகலருக்கு முபயோகமாகும்பொருட்டுச் செய்யுளாகவியற்றி மனுநீதிகாதலென்று பெயர்கொடுத்திருப்பதால் இந்நூலைஇன்னாட்டிலுந் தென்னாட்டிலுந் தென்னாட்டிலுமுள்ள தமிழ்பாடசாலை உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்குக் கற்பிப்பார்களாகில் நீதிகளை எளிதிலறிவார்கள் வேறுநூல்பார்க்கவேண்டுவதில்லை இதன்றிகற்றவர்களும் மற்றவர்களும் கனவான்களும் தனவான்களும் இதைப்பார்வையிட்டால் வெகு விஷயங்களை யெளிதிலறியலாம.